
http://www.thewayofsalvation.org

# மோட்சப் பயணம் aka மோட்சப் பிரயாணம்

John Bunyan`s The Pilgrim's Progress in Tamil





- ஜான் பனியன் - (1628-1688)-

**கவலைப்படும் கிறிஸ்தியான்**

ஒரு நாள் நான் அயர்ந்து தூங்கும்பொழுது ஒரு கனவு கண்டேன். அது ஒரு விசித்திரமான கனவு! அந்தக் கனவைப்பற்றி இப்பொழுது உங்களுக்குக் கூறப்போகிறேன்.
கந்தல் ஆடை அணிந்த ஒரு மனிதனைக் கண்டேன். அவன் கையில் ஒரு பெரிய புத்தகம் இருந்தது. அவன் அந்தப் புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் துவங்கினான். அதைப் படிக்கும்போதே அவன் கண்கள் கலங்கின. உடல் நடுங்கியது.
ஐயோ! நான் என்ன செய்வேன் என்று கதறி அழுதான்.
அவன் தன் வீட்டினுள் நுழைந்தான். அவன் நிலையைக் கண்ட அவன் மனைவியும் பிள்ளைகளும் அருகே வந்தார்கள். அவனால் தனது கவலையை மறைக்கமுடியவில்லை.

அவர்களை அவன் அருகே அழைத்தான்.
என் அன்பான மனைவியே! என் அருமைப் பிள்ளைகளே, இதோ, என் முதுகிலுள்ள இந்தச் சுமை என்னை அதிகமாக அழுத்துகிறது. அதுமட்டுமில்லாமல் நாம் வசிக்கும் இந்த நகரம் வானத்திலிருந்து வரும் நெருப்பினால் அழிக்கப்படும் என்று இந்தப் புத்தகத்தில் படித்தேன். நாம் எப்படியாவது தப்பித்துக்கொள்ளவேண்டுமே. இல்லாவிட்டால் அழிந்துவிடுவோமே என்று அவன் புலம்பினான்.

அவனுடைய மனநிலை சரியில்லை என்று நினைத்துப் பயந்தார்கள் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும். அப்பொழுது இரவு நேரமாகிவிட்டமையால் அவனைப் படுத்து, உறங்கி ஓய்வெடுக்கும்படி கூறினார்கள். மறுநாள் காலையில் அவன் மனைவியும் பிள்ளைகளும் அவன் படுக்கையருகே வந்து அவன் எப்படியிருக்கிறான் என்று விசாரித்தார்கள். அவனோ இன்னும் மோசமாகிவிட்டேனே என்று புலம்பினான். அவர்கள் வசிக்கும் நகரம் அழியப்போகிறது என்று கூறி மீண்டும் அவர்களை எச்சரித்தான். அவர்களோ அவன் பேச்சுக்கு செவிகொடுக்கவில்லை. அவனைக் கேலி செய்யவும், கிண்டல் பண்ணவும் துவங்கினார்கள்.

சிறுது நேரம் பொறுமையுடன் இருந்த அவன் மேலும் அந்த நிந்தனைகனைத் தாங்கமுடியாமல் தன்னுடைய அறைக்குள் சென்றான். தன கவலையை நீக்குமாறு, தன் குடும்பத்தினர் உண்மை நிலையை அறிந்துகொள்ள உதவுமாறு ஆண்டவரை நோக்கி ஜெபித்தான்.
அதன் பின்பு அவன் அடிக்கடி வயல்வெளிகுச் சென்று அந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பான். சிலவேளைகளில் ஜெபம் செய்வான். என்றாலும் அவன் கவலை நீங்கிவிடவில்லை.
நான் இரட்சிக்கப்படுவதற்கு அந்த அழிவிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யவேண்டும்? என்று அடிக்கடி புலம்பிக்கொண்டிருந்தான்!

**நற்செய்தியாளரைச் சந்தித்தல்**

ஒரு நாள் அவன் அழுது கொண்டிருந்தபோது நற்செய்தியாளர் என்ற ஒருவர் அவனருகே வந்தார். ஏனப்பா நீ அழுகிறாய் என்று அன்புடன் கேட்டார்.
ஐயா, நான் ஒருநாள் மரித்துப்போவேன் என்றும் அதன்பின் என் தவறுகளுக்காகத் தண்டிக்கப்படுவேன் என்றும் இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அந்தத் தண்டனைக்குப் பயப்படுவதால் என்னால் சாவைப்பற்றி நினைக்க முடியவில்லை என்றான் கிறிஸ்தியான் என்ற பெயரையுடைய அவன்.
இந்த உலகத்தில்தான் இவ்வளவு துன்பங்களும் தொல்லைகளும் இருக்கின்றனவே? பிறகு ஏன் நீ சாவைப் பற்றிக் கவலைப்படவேண்டும்? என்று கேட்டார் நற்செய்தியாளர்.

ஐயோ, இதோ என் முதுகில் இருக்கிறதே என் பாவச்சுமை. நான் இறந்தபிறகு இந்தச் சுமை என்னை அழுத்தி நரகத்திற்கே கொண்டுபோய்விடும் என்று நினைக்கிறேன் என்றான் கிறிஸ்தியான் கவலையுடன்.
பிறகு ஏன் இங்கே சுற்றிக்கொண்டு இருக்கிறாய்? என்று கேட்டார் நற்செய்தியாளர்.
எனக்கு எங்கே போவது என்றே தெரியவில்லை! என்று அங்கலாய்த்தான் கிறிஸ்தியான்.
நற்செய்தியாளர் அவனிடம் ஒரு காகிதச் சுருளைக் கொடுத்தார். அவன் அதைத் திறந்து பார்த்தான்.
அதில் வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள ஓடிப்போ! என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் நற்செய்தியாளரைப் பார்த்து நான் எங்கே ஓடிப்போக வேண்டும்? என்று கேட்டான்.
நற்ச்செய்தியாளர் தன் கையை நீட்டி வெகு தூரத்தில் சுட்டிக்காட்டி, அதோ வெகு தூரத்தில் ஒரு இடுக்கமான வாசல் தெரிகிறதா? என்று கேட்டார்.
தெரியவில்லையே ஐயா! என்றான் கிறிஸ்தியான் கவலையுடன்.
அப்படியானால் ஒரு பிரகாசமான ஒளியாவது தெரிகிறதா? என்று கேட்டார் நற்செய்தியாளர்.
ஆம் ஐயா, வெகு தூரத்தில் ஓர் ஒளி தெரிகிறது! என்றான் கிறிஸ்தியான்.
நீ அந்த ஒளியை நோக்கி நேராக நடந்துபோ. அருகே நெருங்கும்போது அந்த இடுக்கமான வாசல் தெரியும். அந்த வாசல் கதவைத் தட்டு. அடுத்து நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே சொல்லப்படும் என்று கூறி வழியனுப்பினார் நற்செய்தியாளர்.

**பயணம் துவங்குதல்**

எனது கனவில் அவன் அந்த ஒளியை நோக்கி வேகமாக ஓடுவதைக் கண்டேன். அவன் மனைவியும், பிள்ளைகளும் அவன் பின்னால் ஓடி அவனை வீடு திரும்பும்படி கெஞ்சினார்கள், கதறினார்கள்! ஆனால் அவனோ தன் காதுகளைப் பொத்திக்கொண்டு நித்திய வாழ்வு, நித்திய வாழ்வு என்று கத்தயபடி அந்த ஒளியை நோக்கி ஓடினான். திரும்பியே பார்க்கவில்லை.

அந்த நகரத்தில் உள்ளவர்கள் அவன் ஓடுவதை வியப்போடு பார்த்தார்கள்.சிலர் அவனைக் கேலி செய்தார்ர்கள்.சிலர் அவனைத் திரும்பி வரும்படி கூப்பிட்டார்கள்.அவர்களில் கடின நெஞ்சன், இளகிய நெஞ்சன் என்ற இருவர் மட்டும் அவனை எப்படியாவது கூட்டி வருவோம் என்று சபதம் செய்துவிட்டு அவன் பின்னே ஓடினார்கள்.

அவர்கள் இருவரும் கிறிஸ்தியானுக்கு முன்பாக ஓடிச் சென்று அவனை வழிமறித்தார்கள். ஏன் என்னை வழிமறிக்கிறீர்கள்? என்று கேட்டான் கிறிஸ்தியான்.
நீ கண்டிப்பாக எங்களுடன் நகரத்திற்குத் திரும்பி வரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள் இருவரும்.

அது ஒருக்காலும் முடியாது. இந்த நகரம் கண்டிப்பாக ஒரு நாள் நெருப்பினால் அழிக்கப்பட்டு விடும். நீங்கள் அதில் இருந்தால் அதோடு அழிந்து போவீர்கள் நீங்களும் என்னுடன் வந்து அழிவிற்குத் தப்பிக்கொள்ளுங்கள் என்றான் கிறிஸ்தியான். எங்கள் நண்பர்களையும் எல்லா வசதிகளையும் விட்டுவிட்டு எவ்வாறு வரமுடியும்? என்று கேட்டான் கடின நெஞ்சன்.
ஆமாம், கண்டிப்பாக நண்பர்களையும், வசதிகளையும் விட்டுவிட்டுத்தான் வர வேண்டும். ஏனென்றால் நான் போகிற இடத்திலே இதைவிட மேலான நிரந்திர மகிழ்ச்சி கிடைக்கும். நீங்களும் என்னுடன் வந்தால் அதை அனுபவிக்கலாம் என்றான் கிறிஸ்தியான். இந்த உலகத்தை விட்டுவிட்டு நீ வேறு எதைத்தேடி ஓடுகிறாய்? என்று எரிச்சலுடன் கேட்டான் கடின நெஞ்சன்.

அழியாததும், மாசற்றதும், வாடாததுமான (1 பேதுரு 1:4 ) சுதந்திரத்தைத் தேடிச் செல்கிறேன். மோட்சத்தில் இந்த விடுதலை நமக்குக் கிடைக்கும். அதைத் தேடுகிற யாவரும் அதைக் கண்டடைவார்கள். இதோ இந்த புத்தகத்தைப் படித்துப் பார். உனக்கு எல்லாம் புரியும் என்று புத்தகத்தை நீட்டினான் கிறிஸ்தியான். உன்னுடைய புத்தகம் யாருக்கு வேண்டும்? நீ எங்களுடன் திரும்பி வரப்போகிறாயா இல்லையா? அதைச் சொல் முதலில் என்று அலட்சியமாகக் கேட்டான் கடின நெஞ்சன். வரமாட்டேன். நான் கலப்பையின்மீது கை வைத்து விட்டேன். இனிமேல் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்று மறுத்துவிட்டான் கிறிஸ்தியான். இளகிய நெஞ்சனே, வா, போவோம். இவனிடம் பேசி ஒரு பயனுமில்லை. இவன் தான்தான் புத்திசாலி என்று நினைத்துப் பேசிக் கொண்டிருக்கிறான் என்று இளகிய நெஞ்சனை அழைத்தான் கடின நெஞ்சன்.

அப்படிச் சொல்லாதே. கிறிஸ்தியான் ஒரு நல்ல மனிதன் என்பதை நான் அறிவேன். அவன் சொல்வது உண்மையென்றால் நானும் அவனுடன் போக விரும்புகிறேன் என்றான் இளகிய நெஞ்சன். என்னது? முட்டாள்தனமாகப் பேசாதே. அவன் உன்னை எங்கே கூட்டிக்கொண்டு போவான் என்று உனக்குத் தெரியாதே. பேசாமல் என்னுடன் வந்துவிடு என்று அதட்டினான் கடின நெஞ்சன். ஐயா, தயவுசெய்து திரும்பிப் போகாதீர்கள். இரண்டு பேரும் என்னுடன் வாருங்கள். நான் சொல்லும் நித்திய மகிழ்ச்சி உண்மையானதே. நீங்கள் என்னை நம்பாவிட்டால் இந்தப் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமானதே.

இந்த நூலை எழுதியவர் நமக்காகத் தன்னுடைய இரத்தத்தையே சிந்தியிருக்கிறார் என்று கூறிய கிறிஸ்தியானின் கண்கள் கலங்கின. இளகிய நெஞ்சன் கடின நெஞ்சனை நோக்கி, நான் இந்த நல்ல மனிதரோடு போவதே நல்லது என்று நினைக்கிறேன் என்று முடிவாகக் கூறினான்.
பிறகு அவன் கிறிஸ்தியானைப் பார்த்து, நீ போகும் இடத்திற்கு வழி தெரியுமா? என்று கேட்டான். அதோ அந்தப் பிரகாசமாக ஒளி தெரிகிறதே! அதற்கு அருகே இடுக்கமான வாசல் ஒன்று இருக்கிறது என்று நற்செய்தியாளர் கூறியுள்ளார். அங்கு நாம் போகும்போது அடுத்த நாம் செய்ய வேண்டியது என்னவென்று அங்கே கூறப்படுமாம் என்றான் கிறிஸ்தியான். நல்லது. அப்படியென்றால் நானும் உன் கூடவே வருகிறேன் என்று கூறிய இளகிய நெஞ்சன் கிறிஸ்தியானுடன் சேர்ந்து நடக்கத் துவங்கினான். இதைக் கண்ட கடின நெஞ்சன் முட்டாள்களே, நான் உங்களுடன் வரப்போவதில்லை என்று கூறியபடியே நகரத்தை நோக்கித் திரும்பிவிட்டான்.

## கிறிஸ்தியனும் இளகிய நெஞ்சனும்

கிறிஸ்தியானும் இளகிய நெஞ்சனும் பேசியவாறே அந்தச் சமவெளியில் நடந்து செல்வதை என் கனவில் கண்டேன்.
இளகிய நெஞ்சனே நல்லதுதான் நீ என்னுடனே வந்தாய். நாம் போகும் இடத்தை அடைய முடியாவிட்டால் நமக்குக் கிடைக்கப் போகும் நரக தண்டனையைப் பற்றி அறிந்திருநதால் கடின நெஞ்சன் இப்வாறு திரும்பிப் போயிருக்கமாட்டான். பாவம்! என்றான் கிறிஸ்தியான்.

அது இருக்கட்டும். நாம் போகிற இடத்திலுள்ள நித்திய மகிழ்ச்சியைப்பற்றி எனக்குக்கொஞ்சம் சொல்லமாட்டாயா? என்று ஆவலுடன் கேட்டான் இளகியநெஞ்சன். நான் சொல்லுவதைவிட அந்த மகிழ்ச்சியை அனுபவித்து உணர்வதே மேலானாதாக இருக்கும். என்றாலும் இந்தப் புத்தகம் அதைப் பற்றிக் கூறும் சில வசனங்களை வாசிக்கட்டுமா? என்றான் கிறிஸ்தியான்.
அது சரி இந்தப் புத்தகத்தில் உள்ள வசனங்கள் எல்லாம் உண்மையானவை என்று உனக்குத் தெரியுமா? என்று சந்தேகத்தோடு கேட்டான் இளகிய நெஞ்சன். நிச்சயமாக! ஏனென்றால் பொய்யே கூறாத ஒருவரால் எழுதப்பட்டு புத்தகம் இது என்றான் கிறிஸ்தியான். அப்படியா? அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? நாம் நித்திய காலமாக சாகாமல் வாழக்கூடிய நித்திய ராஜியம் ஒன்று இருக்கிறது என்று இந்தப் புத்தகம் கூறுகிறது. அந்த இடம்தான் மோட்சம். மோட்சத்தை நோக்கிதான் இப்போது பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்றான் கிறிஸ்தியான்.
ரொம்பவும் மகிழ்ச்சி! மோட்சம் எப்படி இருக்கும்? என்று ஆவலாகக் கேட்டான் இளகியநெஞ்சன்.

அங்கே நாம் அணிந்துகொள்ள மகிமையின் கிரீடம் கொடுக்கப்படும். நமது உடைகள் சூரியனைபபோல் பிரகாசமாக இருக்கும். அங்கே அழுகையும,; கவலையும் கிடையவே கிடையாது. ஆண்டவரே நமது கண்ணீர் யாவையும் துடைப்பார் (வெளி 21:4) என்றான் கிறிஸ்தியான். நம்முடனே வேறு யார் அங்கே இருப்பார்கள்? என்று கேட்டான் இளகிய நெஞ்சன்.
ஒளிவீசும் தேவ தூதர்கள் அங்கே இருப்பார்கள். நமக்கு முன்பாக அங்கே போயிருக்கிற ஆயிரக்கணக்கான மனிதர்கள் அங்கே இருபபார்கள். அவர்களில்அநேகர் ஆண்டவர்மீதுள்ள அன்பினாலும், அவருக்குக் கீழ்ப்படிந்ததின் நிமித்தமாகவும் அநேக துன்பத்தை அடைந்திருக்கிறார்கள். சிலர் வாளால் வெட்டுப்பட்டிருக்கிறார்கள். சிலர்நெருப்பில் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் காட்டு மிருகங்களுக்கு இரையாகப்போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இன்று நித்திய வாழ்வு பெற்று மோட்சத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்றான் கிறிஸ்தியான். நாமும் அந்த மகிழ்ச்சியைப் பெறுவது எப்படி என்று உனக்குத் தெரியுமா? என்று கேட்டான் இளகிய நெஞ்சன்.

இந்தப் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று சொல்லட்டுமா? நாம் ஆண்டவரை நோக்கி விருப்பத்தோடு கேட்டால் அவர் இவற்றை நமக்கு இலவசமாகத் தருவாராம் என்றான் கிறிஸ்தியான். அப்படியா? ரொம்பவும் மகிழ்ச்சி. வா, சீக்கிரமாகவே நாம் அங்கே போகலாம் என்று துரிதப்படுத்தினான். பொறு, பொறு. என் முதுகில் இருக்கிறதே பெரிய சுமை! என்னால் வேகமாக நடக்க முடியவில்லை என்று பரிதாபத்துடன் கூறிய கிறிஸ்தியான் அவன் பின்னே தள்ளாடியபடியே நடந்தான்.

### குட்டையில் விழுந்தார்கள்

அவர்கள் இவ்வாறு சென்றுகொண்டிருக்கும் பொழுது பேச்சு சுவாரசியத்தில் வழியின் குறுக்கே இருந்த அவநம்பிக்கை என்ற குட்டையைக் கவனிக்கவில்லை! கால் தவறி இருவரும் அதில் விழுந்துவிட்டார்கள்! குட்டையைவிட்டு வெளியேற அங்குமிங்கும் புரண்ட போது அவர்கள் உடலெங்கும் சேறு அப்பிக்கொண்டது! கிறிஸ்தியானின் முதுகிலுள்ள சுமையினால் அவன் மெல்ல மெல்ல சகதியினுள் மூழ்கத் துவங்கினான்!

என்ன இது? நாம் ஏன் இவ்வாற சிக்கிக்கொண்டோம்? ஏன்று கோபத்தோடு கேட்டான் இளகிய நெஞ்சன். எனக்குத் தெரியவில்லையே! என்றான் கிறிஸ்தியான் பரிதாபமான குரலில். இது தான் நீ கூறிய மகிழ்ச்சியா? ஆரம்பமே இப்படியிருந்தால் மோட்சத்தை அடைவதற்குள் இன்னும் எவ்வளவு ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்குமோ! என்னால் முடியாதப்பா! நீயே போய் எனக்குள்ள மகிழ்ச்சியையும் சேர்த்து அனுபவித்துக் கொள். நான் எப்படியாவது இங்கிருந்து தப்பித்துச் செல்வேன் என்று கோபத்துடன் கத்திய இளகிய நெஞ்சன் குட்டையிலிருந்து வெளியேறக் கடுமையாக முயன்றான். இறுதியில் தான் விழுந்த பக்கமே கரையேறிவிட்டான்! நகரத்தை நோக்கி வேகமாக ஓடத்தொடங்கினான். அதன்பிறகு கிறிஸ்தியான் அவனைப் பார்க்கவேயில்லை! ஆனால் கிறிஸ்தியானோ இடுக்கமான வாசல் இருக்கும் திசைப்பக்கமாக மெல்ல மெல்ல ஊர்ந்து சென்றான். முதுகிலுள்ள சுமையின் பாரத்தினால் அவனால் கரையில் ஏற முடியாமல் தவித்தான்!

அப்போது சகாயர் என்ற ஒருவர் அங்கு வருவதை நான் என கனவில் கண்டேன். அவர் கிறிஸ்தியானைக் கண்டவுடன் நின்று, ஏனப்பா, என்ன ஆயிற்று? என்று அன்புடன் கேட்டார். நற்செய்தியாளர் என்ற மனிதர் நான் தண்டனைக்குத் தப்பும்படியாக இடுக்கமான வாசலைச் சென்றடைய வழிகாட்டினார். நான் அந்த வழியே செல்லும்போது தவறி இந்தக் குட்டைக்குள் விழுந்து விட்டேன் என்றான் கிறிஸ்தியான். நீ ஏன் கவனமாகப் போகக்கூடாது? இந்தக்குட்டையின் நடுவேதான் வரிசையாகக் கற்கள் போடப்பட்டுள்ளதே! அதை நீ பார்க்கவில்லையா? அவற்றின் மீது கால் வைத்து இந்தக் குட்டையை மிக எளிதாகக் கடந்திருக்கலாமே என்றார் சகாயர்.

நான் அவசரப்பட்டதால் அந்தக் கற்களைக் கவனிக்கவில்லை, ஐயா என்றான் கிறிஸ்தியான் வருத்தத்துடன்.
சரி சரி, உன் கையைக் கொடு என்று சொன்ன சகாயர் அவன் கையைப் பிடித்திழுத்து கரையில் சேர்த்தார்.
ஐயா, அழிவின் நகரத்திலிருந்து இடுக்கமான வாசல் செல்லும் வழியில் இந்தக் குட்டை இருக்கிறதே. இதனால் பயணம் செய்பவர்களுக்கு ஆபத்து வரக்கூடுமே. ஏன் இதுவரை இதை மூட வழி செய்யவில்லை? ஏன்று அக்கறையுடன் கேட்டான் கிறிஸ்தியான்.
இந்தக் குட்டையை மூடாமல் அப்படியே வைத்திருக்க வேண்டுமென்பது எங்கள் மன்னனின் விருப்பமல்ல. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ பேர் இதைச் சரிசெய்ய முயன்றிருக்கிறார்கள். ஆனாலும் இதைச் செப்பனிடமுடியவில்லை. ஏனென்றால் உலகிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் இரட்சிப்பைக் குறித்து அவநம்பிக்கை கொள்ளும்போது அந்த எண்ணங்களே இந்தக் குட்டையை உருவாக்கின்றன. அவநம்பிக்கை எண்ணங்கள் பெருகி வருவதால் இந்தக் குட்டை எப்போதுமே நிரம்பி வழிகிறது.

ஆனாலும்கூட விசுவாசத்தோடு இந்தக் குட்டையைக் கடக்க முற்படும்போது, நடுவில் போடப்பட்டுள்ள கற்களைக் கண்டுபிடித்து அதன் மூலம் மிக எளிதில் கடந்து செல்லலாம். இடுக்கமான வாசலை நெருங்குவதற்குள் பாதை சரியாகிவடும் என்ற சகாயர் கிறிஸ்தியானை வழியனுப்பி வைத்தார். இதற்குள்ளாக இளகிய நெஞ்சன் தனது கிராமத்தை அடைந்திருப்பதை நான் என் கனவில் கண்டேன். அவனுடைய நண்பர்கள் அவனைத் தேடி வந்தார்கள். சிலர் அவன் புத்தியோடு திரும்பி வந்ததற்காக அவனைப் பாராட்டினார்கள். வேறு சிலரோ அவன் துன்பங்களைக் சகிக்க முடியாமல் திரும்பி வந்ததற்காக அவனைக் கோழை என்று கூறி கேலி செய்தார்கள். சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த இளகிய நெஞ்சன் பிறகு தானும் அவர்களுடன் சேர்ந்து கிறிஸ்தியானைக் கேலி செய்யத்தொடங்கினான்!

**உலக ஞானியைச் சந்தித்தல்**

கிறிஸ்தியான் தொடர்ந்து சென்று கொண்டிருந்தபோது அவனை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற ஆவலோடு குறுக்கு வழியாக வேகமாக விரைந்துவரும்

ஒருவனை என் கனவில் கண்டேன். அவன் பெயர் உலகஞானி. அவன் கிறிஸ்தியானின் ஊருக்குப் பக்கத்திலிருந்த உலகஞானம் என்ற ஊரைச் சேர்ந்தவன். கிறிஸ்தியான் சுமையைத் தூக்கிக்கொண்டு தள்ளாடியபடியே நடந்து செல்லவதைக் கண்ட உலகஞானி ஏனப்பா, இந்தப் பெரிய சுமையைத் தூக்கிக்கொண்டு எங்கே போகிறாய்? என்று அக்கறையுடன் கேட்பதுபோல விசாரித்தான். ஆமாம் பெரிய சுமைதான். உலகில் வேறு யாருக்குமே இவ்வளவு பெரிய சுமை இருக்காது என்று தான் தோன்றுகிறது. அதோ தொலைவில் இருக்கிற இடுக்கமான வாசலை நோக்கிச் செல்கிறேன். அங்கே சென்றால் என்னுடைய சுமையைத் தொலைக்கும் வழி சொல்லப்படுமாம் என்றான் கிறிஸ்தியான்.

ஏனப்பா, உனக்கு மனைவி பிள்ளைகள் இருக்கிறார்களா? என்று கேட்டான் உலகஞானி. இருக்கிறார்கள். ஆனால் இந்தச் சுமை என்னை அழுத்துவதால் அவர்களைப் பற்றி என்னால் அக்கறைப்பட முடியவில்லை என்று அங்கலாய்த்தான் கிறிஸ்தியான். நான் உனக்கு ஒரு ஆலோசனை கூறுகின்றேன். நீ அதைக்கேட்பாயா? என்று கேட்டான் உலகஞானி. சொல்லும் ஐயா, நல்ல யோசனை என்றால் அதன்படி செய்யலாமே என்றான் கிறிஸ்தியான் ஆவலுடன். முதலில் நீ இந்தச் சுமையைத் தூக்கி எறிய வேண்டும். அப்போதுதான் ஆண்டவர் அளிக்கும் ஆசீர்வாதங்களை உன்னால் அனுபவிக்க முடியும் என்றான் உலகஞானி.

அது சரிதான் ஐயா. அதை ஒழிக்கத்தானே நான் இவ்வாறு பயணம் செய்து கொண்டிருக்கிறேன் என்றான் கிறிஸ்தியான். அதுசரி, உனக்கு இந்தப் பாதையைச் சுட்டிக்காட்டியது யார்? என்று கேட்டான் உலக ஞானி. நற்செய்தியாளர் என்ற ஒருவர் தான் வழிகாட்டினார் என்றான் கிறிஸ்தியான்.
அடடா! அவர் உன்னை ஏமாற்றியிருக்கிறார்! இதைவிட அபாயகரமான பாதையை வேறு எங்குமே காண முடியாது! ஏற்கனவே நீ பல வேதனைகளை அனுபவித்திருக்கிறாய் போலிருக்கிறதே! ஆதே உன் ஆடையெல்லாம் சேறு! அவநம்பிக்கை குட்டையின் சேறுதானே இது? இதுதான் உன் சோதனைகளின் ஆரம்பம். நான் சொல்வதைக் கேள். நீ இன்னும் தொடர்ந்து இதே பாதையில் சென்றால் சோர்வு, வலி, பசி, கடுங்குளிர், காட்டு மிருகங்களின்அபாயம், காரிருள் போன்ற அபாயங்களைச் சந்திப்பதோடு உயிரையும்கூட இழக்க வேண்டியிருக்கும்! ஏன் யாரோ ஒருவருடைய பேச்சைக் கேட்டு உன் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்கிறாய்? என்று அனுதாபத்துடன் கேட்டான் உலகஞானி.

இந்த எல்லா வேதனைகளைக் காட்டிலும் என் சுமையே எனக்குப் பெரிய வேதனையாக இருக்கிறது ஐயா! என்றான் கிறிஸ்தியான் கவலையுடன். எல்லாம் சரிதான், ஆனால் இந்தச் சுமை எப்படி உன் முதுகில் வந்தது? என்று கேட்டான் உலகஞானி. இதோ என் கையிலிருக்கும் இந்தப் புத்தகத்தைப் படித்தபிறகுதான் என்றான் கிறிஸ்தியான். நினைத்தேன். இவ்வாறுதான் உன்னைப்போலப் பலரும் இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு வேண்டாத பாதைகளில் சென்று சொல்லிமுடியாத துன்பங்களைப் பெற்றிருக்கிறார்கள். நீயாவது நான் சொல்வதைக்கேள். உன்னுடைய சுமையை மிக எளிதாகப் போக்குவதற்கான வழியை நான் கூறுகிறேன். இது மிகச் சுலபமான வழி. மிகவும் பாதுகாப்பானது! வழியெங்கும் மகிழ்ச்சிதான்! என்று ஆசைகாட்டினான் உலக ஞானி.
அப்படியா? அந்த வழியை எனக்குச் சொல்லுங்கள், ஐயா! என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான். சொல்கிறேன் கேள். சற்றுத் தொலைவில் நல்லொழுக்கம் என்ற நகரம் உள்ளது. அங்கே நீதிமான் என்ற அறிஞர் வசிக்கிறார். உன்னைப்போல அநேகருடைய சுமைகளை அகற்ற அவர் வழிகாட்டியிருக்கிறார். உன்னுடைய மனக்குழப்பத்தையும் அவர் தீர்த்துவைப்பார்.

அவர் வீட்டில் இல்லாவிட்டால் அவரைப்போலவே புத்திசாலியான அவர் மகன் மரியாதை உனது பிரச்சனையைத் தீர்த்துவைப்பான். நீ திரும்ப ஊருக்குப் போக வேண்டியதில்லை. உனது மனைவியையும் பிள்ளைகளையும் வரவழைத்து அந்த நகரத்திலேயே மகிழ்ச்சியாக வாழலாம். அங்கே குறைந்த வருமானத்திலேயே

காலம்தள்ள முடியும். மேலும் அங்குள்ளவர்கள் எல்லாருமே உத்தமர்களாயிருப்பதால் உனக்கு எந்தத் துன்பமும் வராது என்று விளக்கினான் உலக ஞானி.

இந்தப் பெரியவர் கூறுவதுதான் சரியான வழி போலத் தெரிகிறது என்று நினைத்த கிறிஸ்தியான், ஐயா, அந்த நீதிமானின் வீட்டுக்கு எப்படிச் செல்வது? என்று உற்சாகமாகக் கேட்டான். அதோ தெரிகிறதே ஒரு மலைச் சிகரம். அதன் அடிவாரத்திலுள்ள வீடுகளில் முதல் வீடுதான் அவர் வீடு என்று சுட்டிக் காட்டினான் உலக ஞானி. கிறிஸ்தியான் அவனிடம் விடைபெற்று, மலைச்சிகரத்துக்குத் திரும்பிச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். அவன் அந்த அடிவாரத்தை நெருங்கியபோது மலைச்சிகரத்தை நிமிர்ந்து பார்த்தேன். சிகரம் சரிந்துபோய் அவன்மீது விழுந்துவிடுவதுபோலத் தோன்றியது! பயந்து நடுங்கினான் கிறிஸ்தியான்! அவனுடைய முதுகிலிருந்த சுமையின் எடை அதிகமாகி அவனை அப்படியே அழுத்தியது! மலையிலிருந்து அடிக்கடி புறப்பட்ட அக்கினி சுவாலைகள் அவன் பயத்தை அதிகரித்தன! அவன் உடல் நடுங்கியது! வியர்வை ஆறாகப் பெருகியது! ஐயோ, உலக ஞானியின் யோசனையைக்கேட்டு மோசம் போனேனே! என்று கதறி அழுதான்.

**நற்செய்தியாளருடன் இரண்டாம் சந்திப்பு**

அப்போது அந்த வழியே நற்செய்தியாளர் வருவதைக் கண்டான் கிறிஸ்தியான். தான் செய்த தவறை உணர்ந்த அவன் வெட்கித் தலைகுனிந்தான்! அவனைக் கண்டவுடன், கிறிஸ்தியானே, நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று கோபத்துடன் கேட்டார் நற்செய்தியாளர். ஒன்றுமே பதில்கூற முடியாமல் தலைகுனிந்தவாறே நின்றான் கிறிஸ்தியான். நான்தான் உன்னை இடுக்கமான வாசலை நோக்கிச் செல்லும் பாதையில் போகச் சொன்னேனே! நீ எப்படி வழிதவறி இங்கே வந்தாய்? என்று மீண்டும் கேட்டார் நற்செய்தியாளர். தயங்கியவறே நடந்ததை விவரிக்கத் துவங்கினான் கிறிஸ்தியான். நற்செய்தியாளருடன் பல குறுக்குக் கேள்விகள் கேட்டு அனைத்தையும் அறிந்து கொண்டார்.

கிறிஸ்தியானே, நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள். உன்னை ஏமாற்றிய உலக ஞானி இது போலப் பலரையும் நேரான பாதையிலிருந்து வழிதவற வைத்து அழிவுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். அவன் கூறும் பாதையில் சென்றால் கண்டிப்பாக அழிந்துதான் போகவேண்டும்! ஆண்டவரின் வார்த்தைகளை நம்பி அவர்காட்டும் பாதையில்தான் நீ செல்ல வேண்டும். அவருடைய வார்த்தைகளை வாசிக்கிறேன் கேள். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில், பூமியியே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவர் நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப் போவோம்? (எபி.12:25 ). எனவே பரலோகத்திலிருந்து பேசுகிற ஆண்டவருக்கே நீ செவி கொடுக்க வேண்டும். இதோ இன்னொரு வசனம் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார் (எபி. 10:38 ). கிறிஸ்தியனே, நீ உன் பாதையிலிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறாய். இது ஆண்டவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது என்று வலியுறுத்தினார் நறசெய்தியாளர்.

ஐயா, நான் தவறு செய்துவிட்டேனே என்று கிழே விழுந்து கதறி அழுதான் கிறிஸ்தியான். நறசெய்தியாளர் கைகொடுத்து அவனைத் தூக்கி விட்டார். பயப்படாதே கிறிஸ்தியான். எந்தப் பாவமும் எந்தத் தூசணமும் மனுசருக்கு மன்னிக்கப்படும்.... அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு (மத்தேயு 12:31 , யோவான் 20:27 ). உலக ஞானியைப் பற்றி ஓரிரு உண்மைகளை நான் பற்றி நல்ல அறிவு உடைவயன்தான் நல்ல குணமுடையவன்தான் நல்லொழுக்கத்துடன் வாழ்பவன்தான். ஆனாலும் அவன் சிலுவையைப் பற்றியும், இரட்சிப்பைப் பற்றியும் கூறப்படும் போதனைகளுக்குச் செவிகொடுக்காதபடியால் அவன் ஆண்டவருக்கு

விரோதமானவனே. அவனது போதனையில் மூன்று தவறுகள் காணப்படுகின்றன. முதலாவது அவன் உன்னைச் சரியான பாதையிலிருந்து வழிதவற வைத்தான். இரண்டாவது சிலுவையை நீ வெறுத்துப் புறக்கணிக்கும்படி செய்தான். மூன்றாவது மரணத்துக்குச் செல்லும் பாதையில் உன்னைச் திசை திருப்பிவிட்டான் என்று விளக்கினார் நற்செய்தியாளர்.

கிறிஸ்தியான் முகத்தை மூடிக்கொண்டு அழுதான்.
ஐயா, நான் அவனுடைய முட்டாள்தனமான யோசனையைப் பின்பற்றி சரியான பாதையிலிருந்து விலகி வந்துவிட்டேனே! என்று கதறினேன். தன்னைக் காப்பற்றும்படி கெஞ்சினான்! கவலைப்படாதே, கிறிஸ்தியான். நீ உண்மையாகவே உன் தவறுகளை உணர்ந்தால் ஆண்டவர் உன்னை நிச்சயமாக மன்னிப்பார். வா ஜெபம் செய்வோம் என்று நற்செய்தியாளர் கூறவே இருவருமாகவே முழங்காற்படியிட்டனர். கிறிஸ்தியான் தனது தவறுகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டான்.

அதன்பிறகு நற்செய்தியாளர் அவன் செல்ல வேண்டிய சரியான பாதையைச் சுட்டிக்காட்டி, அவனை அன்போடு வழியனுப்பி வைத்தார். கிறிஸ்தியான் அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக நடந்துசென்றான். எதிரே வருபவர்களிடம் அவன் பேச்சுக் கொடுக்கவேயில்லை! சரியான பாதையை அடைந்தவுடன் இன்னும் வேகமாக நடக்கத் துவங்கினான்!
இறுதியில் இடுக்கமான வாசலை நெருங்கிவிட்டான் கிறிஸ்தியான்! வாசல் கதவின்மீது தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத்.7:7) என்று எழுதப்பட்டிருந்தது!

கிறிஸ்தியான் அதன்படி கதவைத் தட்டினான்! தயாளன் என்ற பெயருடைய நல்ல மனிதர் கதவைத் திறந்தார். யாரப்பா நீ? எங்கிருந்து வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும்? என்று அன்புடன் கேட்டார்.
ஐயா, நான் அழிநகரத்திலிருந்து வரும் ஒரு பாவி. பெயர் கிறிஸ்தியான். வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள நான் சீயோன் மலைக்குச் செல்லவேண்டும். அதற்கு இந்த வழியாகத்தானே போக வேண்டும்? என்று கேட்டான். ஆமாம், உள்ளே வா என்று கூறிய தயாளன் கதவை அகலமாகத் திறந்தார். கிறிஸ்தியானின் கையை வேகமாகப் பற்றி உள்ளே இழுத்தார். கதவை மீண்டும் படாரென்று மூடித் தாளிட்டார்.

## இடுக்கமான வாசல் கோட்டையில் கிறிஸ்தியான்

ஏன் ஐயா, என்னை இழுத்தீர்கள்? என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான். இந்த வாசலுக்குச் சற்றுத் தொலைவிலதான் சாத்தானின் கோட்டை இருக்கிறது. அவன் இங்கே நுழைபவர்களைக் கண்காணித்து, அம்பெய்து கொல்லத்தயாராக இருக்கிறான். சிலர் அவ்வாறு அவன் அம்பால் குத்தப்பட்டு இந்த வாசலினுள் நுழையுமுன்பே இறந்து போயிருக்கிறார்கள். அதனால்தான் உன்னை அவசரமாக உள்ளே இழுத்தேன் என்று விளக்கிய தயாளன், அதுசரி உனக்கு இந்த வழியைக் காட்டியது யார்? என்று கேட்டார்.

நற்செய்தியாளர் என்று கூறிய கிறிஸ்தியான் மிகவும் மகிழ்ச்சியோடு இதுவரை நடந்ததையெல்லாம் அவருக்கு எடுத்துக் கூறினான்.
நல்லது என்னுடன் வா. அடுத்து நீ செல்ல வேண்டிய பாதையை உனக்குக் காண்பிக்கிறேன் என்று கூறிய தயாளன் கிறிஸ்தியானை அழைத்துச் சென்று இடுக்கமும், நேரானதுமான வழியைக் காட்டினார்.

இதோ நேரே தெரிகிறதே, குறுகலான நேர்ப்பாதை. இந்த வழியாகத்தான் நீ செல்லவேண்டும்.பழங்காலத்திய தீர்க்கதரிசிகளாலும், கிறிஸ்துவானவராலும், அவருடைய சீடர்களாலும் இந்தப் பாதை உருவாக்கப்பட்டிருக்கிறது. இருபறமும் பல வளைந்த ஆனால் அகலமான பாதைகள் உண்டு. ஆனால் நீ பாதை மாறிவிடாதே! நேரான ஆனால் இடுக்கமான பாதை தான் சரியான பாதை! நீ

இதே பாதையில் சென்றால் பொருள்கூறுபவர் என்பவரின் வீட்டை அடைவாய். அவர் பல அற்புதமான காரியங்களைப்பற்றி உனக்குக் கூறுவார் என்றார் தயாளன்.
கிறிஸ்தயான் அவரிடம் விடைபெற்று குறுகலான பாதையில் நடந்து சென்றான்.

**பொருள்கூறுபவரின் வீட்டை அடைதல்**

இறுதியாக கிறிஸ்தியான் பொருள்கூறுபவரின் வீட்டை அடைந்தான். கதவைத் தட்டினான்.
யார் அது? என்ற குரல் கேட்டது.
நான்தான் கிறிஸ்தியான். தயாளன் என்னை அனுப்பினார் பொருள்கூறுபவர் என்பவரைப் பார்க்க வேண்டும் என்றான் கிறிஸ்தியான்.
கதவு திறந்தது. பொருள்கூறுபவர் அவனை அன்புடன் அழைத்துச் சென்றார். கிறிஸ்தியானே வா, உனக்குப் பயனளிக்கக்கூடிய அநேக காரியங்களைக் காட்டுகிறேன் என்று கூறிய பொருள்கூறுபவர் அவனை ஒரு தனி அறைக்குக் கூட்டிச் சென்றார்.

அங்கே ஒரு பெரியவரின் படம் மாட்டப்பட்டிருந்தது. அவரது கண்கள் மோட்சத்தையே நோக்கின. நூல்களுக்கெல்லாம் மேலான நூல் அவர் கையில் இருந்தது. உலகம் அவருக்குப் பின்னாகக் காணப்பட்டது.
இவர்தான் மனிதர்களை மனம் மாறச்செய்து அவர்களுக்குப் பின்னாலுள்ள உலகமும், அவர் தலையிலுள்ள கிரீடமும் எதைக் குறிக்கின்றன தெரியுமா? உலகத்தையும் அதிலுள்ள பொருட்களையும் விரும்பாதவர்கள் மோட்சத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம் என்பதே என்று விளக்கினார் பொருள்கூறுபவர்.

அதன்பின் இதுவரை சுத்தம் செய்யப்படாத பெரிய அறை ஒன்றினுள் கிறிஸ்தியானை அழைத்துச் சென்றார் பொருள்கூறுபவர். அறையெங்கும் தூசு நிறைந்திருந்தது!
பொருள்கூறுபவர் சுத்தம் செய்பவனைக் கூப்பிட்டு அறையைப் பெருக்கும்படி கட்டளையிட்டார். அவன் விளக்குமாறு கொண்டு அறையைக் கூட்ட தூசு புகை மண்டலம் போலப் புறப்பட்டது! மூச்சுவிடத் திணறினான் கிறிஸ்தியான்.
பொருள்கூறுபவர் அருகிலிருந்த பெண்மணியிடம், கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து அறையெங்கும் தெளி என்றார். தண்ணீர் தெளித்தபின்பு அறையைச் சுத்தம் பண்ணுவது எளிதாக இருந்தது!
ஐயா, இதன் பொருள் என்ன? என்று கேட்டான் கிறிஸ்தியான்.
இந்த அறைதான் ஒரு மனிதனின் இருதயம். தூசு தான் அவனை அசுத்தப்படுத்தியிருந்த பாவங்கள்! முதலில் அப்படியே அறையைப் பெருக்கியவன்தான் நியாயப்பிரமாணம்.

தண்ணீர் கொண்டுவந்து தெளித்த பெண்மணிதான் சுவிசேசம்! நியாப்பிரமாணம் என்ற சட்டங்கள் நமது பாவங்களை நீக்கி நம்மைச் சுத்தப்படுத்த முடியாது. பதிலாக நமது மனதில் பழைய பாவங்களும் மீண்டும் தலைகாட்ட பாவங்கள் அதிகரிக்கின்றன! சுவிசேசம் என்ற கிறிஸ்துவின் நற்செய்தியை நமது மனம் ஏற்றுக்கொள்ளும்போது, நமது பாவங்கள் நீங்கி, இதயம் சுத்தமாகிறது. அப்போதுதான மகிமையின் இராஜா அதில் தங்க முடியும் என்று கிறிஸ்தியானுக்குப் புரியும்படி தெளிவாக விளக்கினார்.
கிறிஸ்தியானின் கையைப் பிடித்து இழுத்தபடி ஒரு சிறிய அறையினுள் நுழைந்தார் பொருற்கூறுபவர். அங்கே இரண்டு சிறுவர்கள் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். அவர்களில் கோப முகத்தோடு குதித்துக் கொண்டிருந்தவன் ஆத்திரக்காரன். சாந்தமான முகத்தோடு அமைதியாக இருந்தவன் பொறுமை!
ஆத்திரக்காரன் ஏன் இப்படிக் கோபமாக இருக்கிறான்? என்று கேட்டான் கிறிஸ்தியான்.

அவன் கேட்ட பொருள்களுக்காக இன்னும் ஒரு வருடம் காத்திருக்கும்படி அவன் பெற்றோர் கூறிவிட்டார்கள். ஆனால் அவனோ இப்போதே அதைக் கேட்கிறான்.

அதனால்தான் இப்படி ஆத்திரப்படுகிறான். ஆனால் பொறுமையோ அமைதியாகக் காத்திருக்கிறான் என்று விளக்கினார் பொருள்கூறுபவர்.
அப்போது ஒருவர் பைநிறைய பொன்னும் மணிகளும் கொண்டுவந்து ஆத்திரக்காரனின் காலடியில் கொட்டினார். பொறுமையைப் பார்த்து கிண்டலாக சிரித்தபடி ஆத்திரக்காரன் அந்தப் பொக்கிசத்தைக் கைகளில் அள்ளிக் கொண்டான்.

ஆனால் சிறிது நேரத்திற்க்குள் அவையனைத்தையும் செலவழித்துவிட்டான்! அவன் உடுக்கக் கூடக் கந்தை ஆடைகளே மிஞ்சின!
ஆத்திரக்காரன் இந்த உலகத்து மக்களுக்கு அடையாளம் பொறுமைதான் வரப்போகும் புதிய உலகத்து மக்களுக்கு அடையாளம். ஆத்திரக்காரன் எப்படி எல்லாமே உடன்தானே வேண்டும் என்று ஆத்திரப்பட்டானோ, அவ்வாறே இவ்வுலக மக்களும் எல்லாவற்றையும் இப்போதே அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நமது மரணத்திற்குப் பின்னால் உள்ள வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதேயில்லை! ஆத்திரக்காரனின் பொக்கிசம் விரைவாக அழிந்துபோனதுபோல இவ்வுலகத்து இன்பங்களும் சீக்கிரமே அழிந்துபோகும். நாம் நித்திய வாழ்வையே விரும்ப வேண்டும் என்பதற்கு இது ஒரு படிப்பினை என்றார் பொருள்கூறுபவர்.

பின்பு பொருள்கூறுபவர் கிறிஸ்தியானை மற்றொரு இடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு சுவற்றின் ஓரமாக நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. ஒரு மனிதன் அந்த நெருப்பின்மீது வாளி வாளியாகத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். ஆனால் அந்த நெருப்போ அணையவில்லை! இன்னும் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது!
ஏன் நெருப்பு அணையவில்லை? என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.
இந்த நெருப்புத்தான் மனிதனுடைய இருதயத்தில் செயல்படும் ஆண்டவருடைய கிருபை. தண்ணீரை ஊற்றுபவன் சாத்தான். ஆனால் இதோ பார், நெருப்பு இன்னும் பிரகாசமாகவும், மிகுந்த வெப்பத்துடனும் எரிகிறது! அதற்கு என்ன காரணம் தெரியுமா? என்று கூறிய பொருள்கூறுபவர் கிறிஸ்தியானை சுவற்றின் மறு பக்கம் அழைத்துச் சென்றார்.

அங்கே ஒருவர் கையில் எண்ணெய்க் குடவையை ஏந்தியவராய் தொடந்து எண்ணெயை ஊற்றிக் கொண்டிருந்தார். இவர்தான் கிறிஸ்து. அவர் ஊற்றும் எண்ணெய் தான் அவருடைய கிருபை. அவருடைய பிள்ளைகளின் மனதில் தொடர்ந்து ஊற்றிக் கொண்டிருக்கிறார். இதனால் சாத்தானின் செயல்கள் அழிக்கப்படுகின்றன. அவர் ஏன் சுவற்றின் மறுபக்கம் நிற்கிறார் தெரியமா? அவருடைய கிருபையைப் பற்றிச் சந்தேகப்படுகிறவர்களால் அவரைக் காணமுடிவதில்லை என்று விளக்கம் கூறினார் பொருள்கூறுபவர்.
ஒரு அழகான வாயிலண்டை கிறிஸ்தியானை அழைத்துச் சென்றார் அவர். அங்கே கவசம் தரித்த நான்கு பலவான்கள் காவல்காத்துக் கொண்டு நிற்கிறார்கள். அந்த வாயிலினுள் நுழைபவர்களின் பெயர்களை எழுதும்படி ஒருவன் அங்கே அமர்ந்திருந்தான். அந்த வாயிலின் முன்னால் அநேகர் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் அந்த பலவான்களைக் கண்ட பயந்த அவர்கள் உள்ளே நுழையத் துணியவில்லை! அந்த அரண்மனையின் மாடத்தின்மீது வெள்ளை உடை தரித்த பலர் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மனத்திடம் கொண்ட ஒருவன் அந்தப் பெயர் எழுதுபவனின் அருகில் செல்வதை கிறிஸ்தியான் கவனித்தான.
ஐயா, என் பெயரையும் எழுதிக்கொள்ளுங்கள் என்று கூறிய அவன், தன் தலையில் ஒரு தலைக்கவசத்தை அணிந்து கொண்டான். கையில் வாளை ஏந்தினவனாக அந்த நான்கு பேருடனும் போர்புரியக் கிளம்பிவிட்டான்! நான்கு பலவான்களும் அவனுடன் மூர்க்கமாகச் சண்டை போட்டார்கள்! இறுதியில் பல காயங்களைப் பெற்ற அவன் வெற்றிகரமாக வாசலினுள் நுழைந்துவிட்டான்!
வாரும், வாரும்! நித்திய மகிமை உமக்கே என்று வாழ்த்தி வரவேற்ற வெண்ணுடை தரித்தவர்கள் அவனுக்கு வெண்ணங்கியை அணிவித்தார்கள்.
இதற்குப் பொருள் எனக்குத் தெரியுமே! என்று  புன் சிரிப்புடன் கூறிய

கிறிஸ்தியான் புறப்படத் துவங்கினான். பொறு, அவசரப்படாதே என்ற பொருள்கூறுபவர் அவனை ஓர் இருண்ட அறைக்குக் கூட்டிச்சென்றார். அங்கே இரும்புக் கூண்டுக்குள் ஒருவன் சோகமாக அமர்ந்திருந்தான. பெருமூச்சுவிட்டுக் கணகலங்கினான் அவன்.

இவன் ஏன் இவ்வாறு சோகமாக இருக்கிறான்? என்று கேட்டான் கிறிஸ்தியான். நீயே கேட்டுப்பார் என்று கூறிவிட்டார் பொருள்கூறுபவர். இரும்புக் கூண்டை நெருங்கிய கிறிஸ்தியான், நீர் யார்? என்று கேட்டான். ஒருகாலத்தில் நான் ஒரு சிறநத, வெற்றியுள்ள கிறிஸ்தவனாக இருநதேன். மோட்சத்துக்குப் போகும் வழியில் செல்கிறோம் என்று மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் இப்போதோ நான் அழிந்துபோகிறேன் என்று புலம்பினான் அவன.

ஏன் என்ன நடந்தது? கேட்டான் கிறிஸ்தியான். சாத்தான் என்னைச் சோதித்தான். நான் என் உலக ஆசைகளுக்கு இடமகொடுத்துப் பாவம் செய்து விட்டேன். பரிசுத்த ஆவியானவர் என்னைவிட்டு விலகி விட்டார். மனம் திரும்ப முடியாமல் என் இருதயம் கடினப்பட்டுப் போய்விட்டது என்று அழுதான் அவன். ஏன் உன்னால் மனம் திரும்ப முடியாது? என்று கேட்டான் கிறிஸ்தியான். ஆண்டவர் எனக்குக் கொடுத்த காலம் முடிந்து போய்விட்டது. இனி என்னால் ஒன்றுமே செய்ய முடியாது! நித்திய காலமாய் இந்தத் தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும் பெருகுரலெடுத்துப் புலம்பினான் அவன். கிறிஸ்தியானின் உடலில் நடுக்கமே ஏற்பட்டுவிட்டது! உனக்கு எச்சரிக்கை செய்யவே இதைக் காட்டினேன். ஆண்டவருடைய வழியைவிட்டு பாதை மாறிவிடாதே என்று எச்சரித்தார் பொருள்கூறுபவர். சரி ஐயா, ஆண்டவர்தான் எனக்கு உதவிசெய்ய வேண்டும் என்றான் கிறிஸ்தியான். வா, உனக்குக் காட்ட வேண்டியது இன்னும் ஒன்று இருக்கிறது என்று கூறிய பொருள்கூறுபவர் அவனை மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே படுக்கையிலிருந்து எழும் ஒருவனைக் கண்டார்கள். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது! ஏன் இவ்வாறு பயந்து நடுங்குகிறீர்? என்று கேட்டான் கிறிஸ்தியான். ஐயா, நான் தூங்கும் போது ஒரு கனவு கணடேன். வானம் இருண்டு போயிற்று! இடி இடித்தது! பளீர் பளீரென்று மன்னலடித்தது! நான் நிமிர்ந்து பார்த்தேன். மேகத்தின் நடுவே ஒருவர் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான தேவதூதர்கள்! மரித்தவர்களே, நியாயந்தீர்க்கப்பட எழுந்து வாருங்கள் என்ற குரல் கேட்டது. உடனே கல்லறைகள் திறந்தன! இறந்துபோனவர்கள் எழுந்து வந்தார்கள். சிலர் மகிழ்ச்சியோடு ஆண்டவரைத் துதித்தார்;கள். மற்றவர்களோ தலைகளைத் தொங்கப்போட்டுக் கொண்டு பயந்து நடுங்கினார்கள்! மேகத்தின் நடுவே அமர்ந்திருந்தவர்.
பதரை அவியாத அக்கினியில் போடுங்கள் (மத்.3:12, 13:40, வெளி.20:12,15) என்று கட்டளையிட்டார் என்று கூறிய அவன் உடல் மேலும் நடுங்கியது.

நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் திடீரென்று ஒரு பெரிய பள்ளம் தோன்றியது! அதன் அடிப்பாகத்தையே பார்க்க முடியாதபடி அவ்வளவு ஆழம்! அதனுள்ளிருந்து நெருப்பும் புகையும் மேலே எழும்பியது! நியாயத் தீர்ப்பு நாள் வந்துவிட்டதையும், அதற்கு நான் தயாராக இல்லை என்பதையும் உணர்ந்தேன். எனது தண்டனையை நினைத்துத்தான் இவ்வாறு நடுங்குறேன் என்று அவன் கூறியவுடன், தான் அவனைப் போலல்லாது நியாயத்தீர்ப்பைச் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான் கிறிஸ்தியான். கிறிஸ்தியான் கண்ட இவ்வளவு காரியங்களும் அவனுக்குச் சிறந்த படிப்பினையை அளித்தன. பொருள் கூறுபவர் அவன் தொடர்ந்து பயணம் செய்யும் வகையில் அவனை வழியனுப்பி வைத்தார்.

**சிலுவையைத் தரிசித்தல்**

பாட்டுப்பாடிக்கொண்டு, மகிழ்ச்சியோடு நடந்து சென்றான் கிறிஸ்தியான். அவன் சென்ற பாதையின் இருபுறத்திலும் இரட்சிப்பு என்ற சுவர்கள் இருப்பதை நான்

என் கனவில் கண்டேன். உற்சாகமடைந்தவனாக முதுகுச் சுமையோடு ஓடத் துவங்கினான் கிறிஸ்தியான். ஓர் உயரமான இடத்தை அடைந்தான் அவன். அங்கே மரத்தாலான ஒரு சிலுவை நிறுத்தப்பட்டிருந்தது! அதனருகே காலியான ஒரு கல்லறை!

கிறிஸ்தியான் சிலுவையின் அருகே வந்தவுடன் அவன் முதுகிலிருந்த சுமை படாரென அறுந்து கீழே விழுந்தது! உருண்டுபோய் திறந்திருந்த கல்லறைக்குள் சென்று மறைந்துவிட்டது அதன் பிறகு நான் அந்தச் சுமையையே பார்க்கவில்லை. அவரது பாடுகளினால் எனக்கு விடுதலை கிடைத்தது! அவரது மரணத்தினால் எனக்கு வாழ்வு கிடைத்தது! என்று கூறி மகிழ்ச்சியுடன் துள்ளிக்குதித்தான் கிறிஸ்தியான். வியப்போடு சிலுவையைப் பார்த்தவனாக அங்கையே நின்றுகொண்டிருந்தான் அவன். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அப்போது பிரகாசமான ஆடையணிந்த மூவர் வந்து, உனக்கு சமாதானமுண்டாகட்டும் என்று கிறிஸ்தியானை வாழ்த்தினார்கள். முதலாமவர் உன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன என்றார். இரண்டாமவர் அவனது கந்தையாடைகளைக் களைந்து புதிய வெண்ணங்கியை அவனுக்கு அணிவித்தார். மூன்றாமவர் அவன் நெற்றியில் ஓர் அடையாளத்தைப் பதித்து, அவன் கையில் முத்திரையிடப்பட்ட சுருள் ஒன்றைக் கொடுத்தார். நீ செல்லும் பாதையில் இதைப் படித்துப்பார். நீ மோட்ச வாயிலை அடையும்போது இந்தச் சுருளைக் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார். மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தபடி, எந்தவிதமான முதுகுச் சுமையும் இல்லாதவனாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தான் கிறிஸ்தியான். அந்த இடுக்கமான பாதையின் இடதுபக்கச் சுவற்றில் ஏறிக்குதித்து, கிறிஸ்தியானை நெருங்கும் இருவரை என் கனவில் கண்டேன். சம்பிரதாயன், வெளிவேசக்காரன் என்ற இருவருமே அவர்கள்.

அவர்களைக் கண்டவுடன் கிறிஸ்தியான், ஐயா நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? என்று கேட்டான். வீண்பெருமை என்ற ஊரிலிருந்து வருகிறோம். மோட்சத்துக்குச் சென்று பேரும் புகழும் பெற ஆசைப்படுகிறோம் என்றார்கள் அவர்கள். ஐயாமார்களே, நீங்கள் மோட்சத்துக்குப் போக வேண்டுமென்று கூறுகிறீர்கள். ஆனால் இடுக்கமான வாசல் வழியே வராமல் குறுக்குப் பாதையில் வருகிறீர்கள். ஒழுங்கை மீறிய உங்களை ஆண்டவர் மோட்சத்துக்குள் நுழைய அனுமதிப்பாரா? என்று தாழ்மையுடன் சந்தேகம் கிளம்பினான் கிறிஸ்தியான். எங்களுடைய வழி குறுக்குவழிதான். இவ்வாறு வருவதுதான் எங்கள் ஊர் மனிதர்களின் பழக்கம். நீயோ இடுக்கமான வாசல் வழியே வந்தாய்! நாங்களோ சுவர் ஏறி வந்தோம்! ஆனால் இருவரும் ஒரே பாதையில்தானே செல்கிறோம் என்று கூறினார்கள் அந்த இருவரும்.

நானோ ஆண்டவரின் கட்டளைப்படி நடக்கிறேன். நீங்களோ உங்கள் சுய விருப்பத்தின்படி நடக்கிறீர்கள். ஆண்டவர் ஏற்கனவே உங்களைக் கள்வர்கள் என்று தீர்ப்பளித்திருப்பார் என்று உறுதியாகக் கூறினான் கிறிஸ்தியான். நாங்கள் எங்கள் வழியில் செல்கிறோம். நீ உன் வழியைப் பார்த்து நட என்று கூறிவிட்டார்கள் அந்த இருவரும். மூவருமாக அந்தப் பாதையில் தொடர்ந்து நடந்து சென்றார்கள். அவர்கள் இருவரும் மீண்டும் கிறிஸ்தியானோடு விவாதத்திற்கு வந்தார்கள். நாங்களும் விதிகளைக் கடைப்பிடித்து நடப்பவர்கள்தான். எங்களுக்கும் உனக்கும் ஒரே வித்தியாசம் தான். நீ வெண்ணங்கி அணிந்திருக்கிறாய். எங்களுக்கு இல்லை அவ்வளவுதான் என்றார்கள்.

ஆண்டவர் அளித்த அங்கி இது! நான் மோட்ச வாசலை அடையும்போது இந்த அங்கியின் மூலம் அவர் என்னை அடையாளம் கண்டுகொள்வார். என் நெற்றியில் ஓர் அடையாளம் போடப்பட்டுள்ளது. இதோ இந்த முத்திரையிடப்பட்டுள்ள சுருளை நான் வாசலண்டை வராதபடியால் உங்களுக்கு இவைகள் கொடுக்கப்படவில்லை என்றான் கிறிஸ்தியான். ஒன்றுமே பதில் கூறாத அவர்கள் கிறிஸ்தியானைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.

**கடினமலையை அடைதல்**

மூவரும் கடினமலை என்ற மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். அங்கே ஓரு நீரோடை காணப்பட்டது. அவர்கள் சென்ற பாதையின் இடதுபுறமும், வலதுபுறமும் இரண்டு பாதைகள் பிரிந்துசென்றன.
ஆனால் இடுக்கமான பாதையோ அவற்றின் நடுவே மலையுச்சியை நோக்கிச் சென்றது!

கிறிஸ்தியான் அந்த நீரோடைக்குச் சென்று தெளிந்த நீரைப் பருகினான். களைப்பு நீங்கியவனாக இடுக்கமான பாதையின் வழியாக மலையேறத் துவங்கினான். இடுக்கமான பாதை மலையேறும் கடினமான பாதையாக இருப்பதைக்கண்ட சம்பிரதாயன், வெளி வேசக்காரன் இருவரும் மற்ற இரண்டு பாதைகளிலும் தனித்தனியே பிரிந்து சென்றார்கள். இடதுபுறம் அபாயப் பாதையில் சென்றவன் அடர்ந்த காட்டினுள் வழிதப்பி அலைந்தான்! வலதுபுறம் அழிவின் பாதையில் சென்றவன் செங்குத்தான பாறையிலிருந்து விழுந்து உயிர் துறந்தான்! இடுக்கமான பாதை வழியே மிகக் கடினத்துடன் பாதையேறத் துவங்கினான் கிறிஸ்தியான். போகப்போக பாதை செங்குத்தானபடியால் தவழ்ந்தபடி ஏற நேரிட்டது!

பாதி வழியில் பயணிகளுக்காக ஆண்டவர் அமைத்த இளைப்பாறும் ஸ்தலம் இருந்தது. கிறிஸ்தியான் களைப்போடு அங்கு சென்று அமர்ந்தான். சுருளை எடுத்துப் படிக்கத் துவங்கினான். அவன் கண்களைத் தூக்கம் தழுவியது. சுருள் கையிலிருந்த நழுவியதுகூடத் தெரியாமல் ஆழ்ந்து உறங்கிவிட்டான்! அப்போது ஒருவர் வந்து, சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதன் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள் (நீதி.6:6) என்று கூறி அவனை எழுப்பி விட்டார்!
திடுக்கிட்டு விழித்த கிறிஸ்தியான், மலையுச்சியை அடையும்வரை விரைந்து பயணம் செய்தான்! அங்கே இருவர் அவனை நோக்கி எதிர்த் திசையில் வருவதைக் கண்டு வியப்படைந்தான். கோழை, அவநம்பிக்கை என்ற அந்த இருவரையும் பார்த்து,
ஏன் ஐயா? என்ன ஆயிற்று? என்று கேட்டான்.

போகும் வழியில் சிங்கத்தைப் பார்த்தோம். இன்னும் போகப்போக அபாயம்தான் என்று எண்ணித் திரும்பிவிட்டோம் நடுங்கும் குரலில் கூறினார்கள் அந்த இருவரும்.
நீங்கள் எனக்கும் பயமூட்டிவிட்டீர்கள். நான் இப்போது என்ன செய்வது? திருப்பிப் போவதென்றால் நிச்சயமாக மரணதண்டனைதான் கிடைக்கும். நேரே சென்றாலும் மரணத்துக்கேதுவான அபாயங்கள் என்று ஒரு கணம் தயங்கிய கிறிஸ்தியான்,
இல்லை..................இல்லை................ நான் நேராகத்தான் செல்வேன். பாதையின் முடிவில் எனக்கு நித்திய வாழ்வு கிடைக்குமே! என்று கூறியபடி உற்சாகத்தோடு முன்னே செல்லத் துவங்கினான். கோழையும் அவநம்பிக்கையும் மலையிலிருந்து கீழிறங்கி ஓடிவிட்டார்கள்.

**சுருளைக் காணோம்**

நடந்து சென்ற கிறிஸ்தியான் சுருளில் கூறப்பட்டிருக்கும் ஆறுதலான வார்த்தைகளைப் படிக்கலாம் என்ற எண்ணத்துடன் பையினுள் கையைவிட்டான்! திடுக்கிட்டு நின்றான்! சுருளைக் காணாது கலவரமடைந்தான்! தான் உறங்கும்போதுதான் அதைக் கீழே விட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். முழங்காற்படியிட்டு ஆண்டவரிடம் தனது கவனக் குறைவுக்காக மன்னிப்புக் கேட்டான்.
கண்ணீர்விட்டபடியே சுருளைத் தேடி ஓடினான் கிறிஸ்தியான். ஆண்டவர் அந்த இளைப்பாறும் தலத்தைக் கட்டியிருந்தது சற்று அமர்ந்திருக்கத்தானே! ஆனால்

கடமையை மறந்து உறங்கிவிட்டது என்னுடை தவறுதானே என்று எண்ணி வருந்தினான்.
இளைப்பாறும் தலத்தை அடைந்தவுடன் சுற்றிலும் தேடினான். சுருளைக் கண்டவுடன் அதை எடுத்துப் பத்திரமாக பையினுள் வைத்துக்கொண்டான். அப்போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.
வேகவேகமாக மீண்டும் மலைமீது ஏறினான் கிறிஸ்தியான். அனால் அவன் மலையுச்சியை அடைவதற்குள் இருட்டிவிட்டது! கோழையும், அவநம்பிக்கையும் சிங்கங்களைப் பற்றிக் கூறியிருந்தது அவன் நினைவில் எழுந்தது.
இந்த இருட்டு வேளையில் அந்தச் சிங்கங்கள் என் மீது பாய்ந்து என்னைக் கொன்றுபோடுமே! என்று பயந்தான் கிறிஸ்தியான். உடன்தானே தனது தவறை உணர்ந்தான் அவன். தனது அவநம்பிக்கைக்காக ஆண்டவரை நோக்கி மன்னிப்புக் கேட்டான்.

**அலங்கார மாளிகை**

விசுவாசத்தோடு முன்னேறிச் சென்ற கிறிஸ்தியான் அலங்கார மாளிகை என்ற அழகான அரண்மனையைக் கண்டான். இரவு அங்கே தங்கச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு மாளிகையை அடைந்தான்.
அருகே செல்லச்செல்ல பாதை மிகவும் குறுகலாகியது! வாசலின் அருகே இரண்டு சிங்கங்கள் படுத்திருப்பதைக்கண்டு தயங்கினான்!
கோழையும் அவநம்பிக்கையும் இந்தச் சிங்கங்களைக் கண்டுதான் பயந்து ஓடினார்கள்போலும்! என்று நினைத்தான் கிறிஸ்தியான்.
கிறிஸ்தியான் தயங்கி நிற்பதைக் கண்டு விழித்திருப்போன் என்ற பெயருடைய அரண்மனைக் காவல்காரன், ஏன் கோழைபோல அங்கேயே நின்றுவிட்டாய்? சிங்கங்களைப்பற்றிப் பயப்படாதே! அவை சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றன! உன்னுடைய விசுவாசத்தைச் சோதிக்கவே அவை இங்கே இருக்கின்றன. நீ பாதையின் நடுவே நடந்து வந்தால் அவை உன்னை ஒன்றும் செய்யாது என்று அவனை நோக்கிக் கூறினான்;.
நடுக்கத்துடனே கிறிஸ்தியான் மெதுவாக முன்னேறிச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். சிங்கங்கள் கெர்ஜித்தன! ஆனால் கிறிஸ்தியானை ஒன்றுமே செய்யவில்லை!

காவல்காரனிடம் சென்று கிறிஸ்தியான் ஐயா, நான் இன்றிரவு இங்கே தங்கலாமா? என்று கேட்டான்.
பயணிகள் பாதுகாப்பாகத் தங்குவதற்காகத்தான் இந்த மலையின் எஜமானர் இந்த மாளிகையைக் கட்டியுள்ளார். நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டான் காவல்காரன்.
அழிநகரத்திலிருந்து வருகிறேன். நித்திய நகரமான மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன் என்றான் கிறிஸ்தியான்.
உன் பெயர் என்ன? ஏன் இவ்வளவு இருட்டிய பிறகு வருகிறாய்? என்று கேட்டான் காவல்க்காரன்.
முன்பு என் பெயர் கிருபையற்றோன், ஐயா. இப்பபோதோ என் பெயர் கிறிஸ்தியான் என்று கூறி அவன் தான் இளைப்பாறும் தலத்தில் சுருளைத் தொலைத்து விட்டதுபற்றியும், அதைத் தேடி வருவதற்காக இவ்வளவு தாமதமாகிவிட்டது என்பதையும் எடுத்துரைத்தான்.

இதைக் கேட்டவுடன் விழித்திருப்போன் ஒரு மணியை அடித்தான். மணியோசை கேட்டவுடன் விவேகம் என்ற பெயருடைய ஒரு அழகிய பெண்மணி கதவைத் திறந்து வெளியே வந்தாள்.
காவல்காரன் கிறிஸ்தியானை அவளுக்கு அறிமுகம் செய்துவிட்டு, இவன் இங்கே இரவு தங்க அனுமதி கிடைக்குமா? என்று கேட்டான்.
விவேகம் கிறிஸ்தியானைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டாள். கிறிஸ்தியான் தான் பயணம் புறப்பட்டதின் காரணத்தையும், வழியில் தான் அனுபவித்த சோதனைகளும் எடுத்துக் கூறினான்.
இதைக் கேட்ட விவேகம் கண்ணீர்விட்டாள். இங்கே வருவதற்குள் எவ்வளவு துன்பங்களைச் சகித்திருக்கிறீர்! வாரும், வீட்டிலுள்ள மற்றவர்களை அறிமுகம்

செய்துவைக்கிறேன் என்று கூறி விவேகம் கிறிஸ்தியானை உள்ளே அழைத்துச் சென்றாள்.
முன்யோசனை, பக்தி, கருணை என்ற தன்னுடைய சகோதரிகளையும் மற்றவர்களையும் அவள் கிறிஸ்தியானுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவர்கள் அனைவரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, வாரும்! என்று வாழ்த்துக்கூறி அவனை வரவேற்றார்கள்!
விவேகமும் அவளுடைய சகோதரிகளும் நீண்ட நேரம் கிறிஸ்தியானோடு ஆண்டவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். உணவருந்திய பின்பு அவரவர் அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார்கள். சமாதானம் என்ற மேலறை கிறிஸ்தியானுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. விடியும்வரை மன அமைதியுடன் உறங்கினான் கிறிஸ்தியான்.

மறுநாள் அந்தச் சகோதரிகள் மீண்டும் அவனுக்கு ஆண்டவரைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும், அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களை அவர் மன்னிக்கச் சித்தமாயிருக்கிறார் என்றும், அவரைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறின என்றும் விளக்கமாகச் சொன்னார்கள். கிறிஸ்தியான் அனைத்தையும் ஆவலோடு கேட்டு மனதில் பதிய வைத்துக்கொண்டான்.
அதன்பின்பு அந்த மாளிகையின் ஆயுதசாலைக்கு அவனை அழைத்துச் சென்றார்கள். கச்சைகள், மார்க்கவசம், கேடகம், தலைச்சீரா, பட்டயம் (எபே.6:11-18) இவையனைத்தையும் கண்டு மகிழ்ச்சியடைந்தான் கிறிஸ்தியான்.
நீர் போகும் வழியில் பல விரோதிகளையும், ஆபத்துக்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே நீர் இந்த ஆயுதங்களை எடுத்துக் கொள்ளும் என்று சகோதரிகள் கேட்டுக் கொண்டார்கள்.
உற்சாகத்தோடு கச்சை, மார்க்கவசம், தலைச்சீரா, காலில் போடும் பாதரட்சை இவற்றை அணிந்துகொண்டான் கிறிஸ்தியான். பட்டயத்தையும், கேடகத்தையும் கையில் பிடித்துக்கொண்டான்!
இவ்வாறு கவசம் அணிந்தவனாக அவர்களுடன் புறப்பட்டு, மீண்டும் வாசலண்டை வந்தான்.

ஐயா, யாராவது இந்த வழியே சென்றார்களா ? என்று காவல்க்காரனிடம் கேட்டான்.
ஆமாம் உண்மையானவன் என்பவர் இந்த வழியே சென்றார். இதற்குள் மலையின் மறுபுறம் இறங்கி விட்டிருப்பார் என்றான் காவல்க்காரன.
ஊண்மையானவனா? என்னுடைய வீட்டிற்கு அருகில் வசித்தவன் தான் அவன். நான் துரிதமாகச் சென்றால் அவனைப் பிடித்துவிடலாம் என்று கூறிய கிறிஸ்தியான் உடனே புறப்பட்டான்.
சகோதரிகள் நால்வரும் மலையடிவாரம் வரை அவனோடு வருவதாகக் கூறி உடன் வந்தார்கள். மீட்பரைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றார்கள்.
என்ன இது ? மலையின்மீது ஏறுவதுதான் கடினமாக இருந்ததென்றால், இறங்குவது இன்னும் அபாயமாக இருக்கும் போலிருக்கிறதே என்றான் கிறிஸ்தியான்.

ஆமாம், ஏனென்றால் இந்த மலைச்சரிவு தாழ்மையின் பள்ளத்தாக்கை நோக்கிச் செல்கிறது. வழியில் ஏதேனும் அபாயங்கள் நேரிட வாய்ப்புண்டு. அதனால் தான் நாங்கள் உன்னுடன் வருகிறோம் என்றாள் விவேகம்.
அனைவருமாக மலையடிவாரத்தை அடைந்தார்கள். சகோதரிகள் கிறிஸ்தியானிடம் ஒரு திராட்சை இரசப்புட்டி, ஒரு ரொட்டி, உலர்ந்த திராட்சை இவற்றை உணவுக்காகக் கொடுத்துவிட்டு விடைபெற்றார்கள்.
நன்றியோடு இவற்றைப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தியான் தன்னந்தனியாக தாழ்மையின் பள்ளத்தாக்கில் நடக்கத் துவங்கினான்.

**அப்பொல்லியோனோடு சண்டை**

பள்ளத்தாக்கில் செல்லும்போது அப்பொல்லியோன் என்ற கொடிய பிசாசானவன் அவனுக்கு எதிரே வந்தான். திடுக்கிட்டு நின்ற கிறிஸ்தியான் முன்னே போவதா

பின்வாங்குவதா என்று ஒருகணம் தயங்கினான். பின்பு விசுவாசத்தோடு கேடயத்தைப் பிடித்தவனாய், கையில் பட்டயத்தை எடுத்துக்கொண்டு முன்னே சென்றான்.
அப்பொல்லியோன் மிகவும் கொடூரமான தோற்றமுடையவன்! அவன் உடலெங்கும் மீனைப்போல செதில்கள் இருந்தன! கரடியைப் போன்ற பாதங்களையும், பறவையைப் போன்ற இறக்கைகளையும் கொண்டிருந்தான். சிங்கத்தின் வாயைப் போன்ற அவன் வாயிலிருந்து நெருப்பும், புகையும் புறப்பட்டு வந்தது! அழிநகரத்தின் அரசன் அவன்! தன்னுடைய நகரத்திலிருந்து தப்பிச் செல்லும் கிறிஸ்தியானை எப்படியாவது கொன்று போட வேண்டும் என்பதே அவன் எண்ணம்.
நில்லப்பா நில். நீ என்னுடைய நகரத்தைச் சேர்ந்தவன். எனக்கு ஊழியம் செய்ய வேண்டியவன். என்னை விட்டுவிட்டு எங்கே போகிறாய்? என்று கோபத்துடன் கேட்டான் அப்பொல்லியோன்.

நான் உமது நகரத்தில் பிறந்தவன் என்பது உண்மை தான். ஆனால் உமக்கு ஊழியம் செய்தால் எனக்கு என்ன கூலி கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டேன். பாவத்தின் சம்பளம் மரணம் அல்லவா? அதனால்தான் நான் இப்போது இராஜாதி ராஜாவின் ஊழியக்காரனாகிவிட்டேன். அவருடைய சம்பளம், அவர் உறவு. அனைத்தும் உன்னைவிட மேலானவை. என்னைத் தடுக்காதே. நான் அவரையே பின்பற்றுவேன் என்று திடமாகக் கூறினான் கிறிஸ்தியான்.
இதைக் கேட்ட அப்பொல்லியோன் கடும் கோபம் கொண்டான். ஓர் ஈட்டியை எடுத்து கிறிஸ்தியானின் மார்புக்கு நேராக வீசியெறிந்தான்! ஆனால் அவனோ தனது கேடகத்தால் அதைச் சுலபமாகத் தடுத்து வீழ்த்திவிட்டான்! ஆவியின் பட்டயத்தினால் அப்பொல்லியோனைத் தாக்க துவங்கினான் கிறிஸ்தியான். கிறிஸ்தியானை வெட்டி வீழ்த்தும்படி அருகே ஓடி வந்தான் அப்பொல்லியோன்! தனது பலத்தையெல்யாம் திரட்டி எழுந்த கிறிஸ்தியான் வாளை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டான்.

என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோசப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன் (மீகா7:8) என்று ஆவேசமாகக் கூறியபடி பாய்ந்த கிறிஸ்தியான் அப்பொல்லியோனின் மார்பில் தனது வாளைச் சொருகினான்! படுகாயப்பட்ட அவன் புறமுதுகு காட்டியபடி ஓடிவிட்டான்! கிறிஸ்தியான் அதன்பிறகு அவனைப் பார்க்கவேயில்லை!
அப்பொல்லியோனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியதற்க்காக ஆண்டவருக்கு நன்றிகூறினான் கிறிஸ்தியான். அப்போது ஒரு கை தோன்றி, ஜீவ மரத்தின் இலைகளை அவனுக்கு அளித்தது! அந்த இலைகளைத் தனது காயங்களின்மீது வைத்தான் கிறிஸ்தியான். உடன்தானே அவர் பூரண குணமடைந்துவிட்டான்! தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ரொட்டியைப் பிட்டுச் சாப்பிட்டு திராட்சை இரசத்தை அருந்தினான். அதன் பிறகு புத்துணர்வு கொண்டவனாக, பட்டயத்தைக் கையிலேந்தியபடி தனது பயணத்தைத் தொடர்ந்தான் கிறிஸ்தியான்.

**மரண இருளின் பள்ளத்தாக்கில் கிறிஸ்தியான்**

அதன்பிறகு கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கை அடைவதை நான் என் கனவில் கண்டேன். அப்போது இருவர் அவனுக்கு எதிராக ஓடிவந்தார்கள். ஐயா, நேரே போகாதீர்கள். இந்தப்பள்ளத்தாக்கு முழுவதும் ஓரே இருளாக இருக்கிறது. கொடிய மிருகங்களையும், விகாரமான ஜந்துக்களையும் அங்கே கணடோம். எங்கும் வேதனையில் துடிப்பவர்களின் கூக்குரல்தான் கேட்கிறது என்று கூறி அவனைத் தடுத்தார்கள்.

ஆனால் கிறிஸ்தியானோ, நான் செல்லவேண்டிய வழி இதுதான். எனவே திடமனதோடு இதில்தான் செல்வேன் என்று கூறியபடி நேரே சென்றான். மரண இருளின் பள்ளத்தாக்கின் நடுவே சென்ற பாதை மிகவும் குறுகலாக இருந்தது. அதன் இடதுபுறம் ஆழமான குழி காணப்பட்டது. வலதுபுறம் ஓரே சதுப்பு நிலக் காடாகக் காட்சியளித்தது! இரண்டு புறமும் சறுக்கி விழுந்துவிடாமல் நடுவில் நடந்துசெல்வது கடினமாகவேயிருந்தது!

பள்ளத்தாக்கின் மையப் பகுதியில் நரகத்தின் வாசல் இருந்தது. அதிலிருந்து நெருப்பும், புகையும் புறப்பட்டு வந்தது. கர்ணகடுரமான சத்தங்களும் கேட்டன! கிறிஸ்தியான் தனது பட்டயத்தை உறையில் போட்டு விட்டு ஒரு புதிய ஆயுதத்தை கையில் எடுத்துக் கொண்டான். ஜெபமே (எபே.6:18) அந்தப் புதிய ஆயுதம்! ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும் என்று தொடர்ந்து ஜெபம் செய்தான்.

துஸ்ட மிருகங்கள் அவனை நெருங்கி வந்தன. ஆண்டவருடைய வல்லமையால் நான் தொடர்ந்து நடப்பேன் என்று விசுவாசத்தோடு சத்தமிட்டான். அந்த மிருகங்கள் விலகி ஓடிப்போயின!
இருள் விலகி காலையில் வெளிச்சம் வந்தவுடன் கிறிஸ்தியான் தான் வந்த பாதையைத் திரும்பிப்பார்த்தான். ஆபத்துக்களுக்கு மத்தியில் மிகவும் குறுகலான பாதையில் தன்னைப் பத்திரமாக வழிநடத்திய ஆண்டவரைத் துதித்தான்!
பள்ளத்தாக்கிலிருந்த ஒரு குன்றுப் பகுதியை அடைந்தான் கிறிஸ்தியான். மேடான இடத்திலிருந்து சுற்றிலும் பார்த்தான். அப்போது சற்றுத் தொலைவில் உண்மையானவன் நடந்துசெல்வதைக் கண்டான்.
உண்மையானவனே கொஞ்சம் நில். நானும் உன் கூட வருகிறேன் என்று குரல்கொடுத்தான் கிறிஸ்தியான்.

என்னால் நிற்க முடியாது பழிவாங்குபவர்கள் என்னைத் தொடர்ந்து வருகிறார்கள் என்று கூறிய உண்மையானவன் நிற்காமல் சென்றான்.
இதைக் கண்ட கிறிஸ்தியான் அவனை எப்படியாவது பிடித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தோடு அவன் பின்னே ஓடினான். ஓடிச் சென்ற அவன் உண்மையானவனை மிகச் சுலபமாக தாண்டி விட்டான். தன்னுடைய வேகத்தை எண்ணி பெருமைப்பட்டான் பாதையைக் கவனிக்கவில்லை! கால் தடுக்கி கீழே விழுந்துவிட்டான்! உண்மையானவன் ஓடிவந்து அவனைத் தூக்கி விட்டான்.
இருவருமாகப் பேசிக்கொண்டே நடந்து சென்றார்கள். கிறிஸ்தியான் வழியில் தான் பெற்ற அனுபவங்களையெல்லாம் விவரித்துக் கூறினான்.

**உண்மையானவனின் அனுபவங்கள்**

எனக்கும் வழியில் எத்தனையோ சோதனைகள் ஏற்ப்பட்டன என்றான் உண்மையானவன்.
அப்படியா? எங்கே அதைப்பற்றிச் சொல் பார்ப்போம் என்று ஆர்வத்தோடு கேட்டான் கிறிஸ்தியான்.
சொல்கிறேன் கேள். நீங்கள் விழுந்ததுபோல நான் அவநம்பிக்கைச் சேற்றில் விழாமல் தப்பிவிட்டேன். ஆனால் கடினமலையின் அடிவாரத்தில் வரும்போது வஞ்சமாநகரைச் சேர்ந்த ஆதாம் என்பனைச் சந்தித்தேன். அவன் என்னைத் தன்னுடைய வீட்டுக்கு வரும்படியும், எல்லா உலக இன்பங்களையும் தருவதாகவும் ஆசை காட்டினான். முதலில் ஆசைப்பட்ட நான் பிறகு என்னுடைய தவறை உணர்ந்தேன். அவனுடைய கைகளிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு ஓடிவந்து விட்டேன் என்று பெருமூச்சுவிட்டான் உண்மையானவன்.
நல்லதாகப் போயிற்று! என்றான் கிறிஸ்தியான்.

அதோடு முடிந்துவிடவில்லை! நான் கொஞ்சம் ஆசைப்பட்டதுக்குத் தண்டனையும் கிடைத்துவிட்டது! என்றான் உண்மையானவன்.
எப்படி ? கேட்டான் கிறிஸ்தியான்.

கடின மலையிலிருந்து இளைப்பாறும் தலத்தைத் தாண்டியிருப்பேன். அப்போது ஒருவர் என்னை நோக்கி வேகமாக வந்தார். அவரைப் பார்த்தவுடன் அப்படியே நின்றுவிட்டேன். அதற்குள் அவர் ஒரு சாட்டையை எடுத்து என்னை அடிக்கத் துவங்கிவிட்டார். ஏன் ஐயா, என்னை அடிக்கிறீர்கள்? என்று பரிதாபமாக கேட்டேன். நீ ஆதாம் கூறிய உலக இன்பத்துக்கு ஆசைப்பட்டாயல்லவா? என்று கடிந்து கொண்ட அவர் மேலும் அடித்தார். ஐயா, கிருபைகூர்ந்து என்னை விட்டுவிடும் என்று கெஞ்சினேன் என்றான் உண்மையானவன்.
ஆச்சச்சோ, அப்புறம் ? கேட்டான் கிறிஸ்தியான்.

அப்போது ஒருவர் வந்து என்னை அடிப்பதைத் தடுத்து நிறுத்தினார். அவர் கைகள் ஆணிகளால் துளைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் அவர் தான் நமது ஆண்டவர் இயேசு என்று அறிந்து பரவசமுடன் அவரைத் துதித்தேன். பிறகு நான் தாழ்மையின் பள்ளத்தாக்கில் திருப்தியின்மை என்ற பெயரையுடையவன் என்னைச் சந்தித்தான். தாழ்மையின் பள்ளத்தாக்கில் நடப்பது நமது பெருமைக்கு ஏற்றதல்ல என்றான். நானோ மேன்மைக்கு முன்னானது தாழ்மை, அழிவுக்கு முன்னானது அகந்தை (நீதி.15:33,16:18) என்ற வசனங்களை எடுத்துக்கூறி அவனிடமிருந்து தப்பிவிட்டேன் என்றான் உண்மையானவன்.

வேறு ஒருவரையும் நீ பார்க்கவில்லையா? என்று கேட்டான் கிறிஸ்தியான். இன்னும் ஒருவனை நான் சந்தித்தேன். அவன் பெயர் வெட்கம். நாம் நமது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்பது இழிவானது என்று அவன் வாதம் செய்தான்.

நானோ மனுசருக்குள்ளே, மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது (லூக்கா 16:15) என்ற வசனத்தைக் கூறி நாம் தேவனுக்கு முன்பாக மிகவும் தாழ்வானவர்கள், அற்பமானவர்கள் என்றேன். அவன் பதில்கூறாது போய் விட்டான். அதன்பிறகு ஒருவரும் என்னைத் தொந்தரவு செய்யவில்லை என்றான் உண்மையானவன்.
இவ்வாறு அவர்கள் பேசியபடி சென்றபொழுது நற்செய்தியாளரைச் சந்தித்தார்கள். கிறிஸ்தியான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! நற்செய்தியாளர் அன்போடு அவர்களைப்பற்றி விசாரித்தார். இருவரும் நடந்தவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் விவரித்தார்கள்.

எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து இதுவரை வெற்றிகரமாக வந்துவிட்டீர்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். ஆனாலும் இனிமேல்தான் உங்களுக்குப் பெரிய ஆபத்துக்கள் இருக்கின்றன. சற்றுத் தொலைவில் மாயாபுரி என்ற நகரம் இருக்கிறது. அங்குள்ள விரோதிகள் உங்களைக் கொல்ல முயலுவார்கள். நீங்கள் இரத்தச் சாட்சிகளாக மரிக்க நேரிட்டாலும் நேரிடலாம். என்றாலும் மரணபரியந்தம் உண்மையாக இருங்கள். அப்போது ஆண்டவர் உங்களுக்கு ஜீவ கிரீடத்தைத் தருவார் (வெளி.2:10) என்று கூறிய நற்செய்தியாளர் ஜெபத்தோடு அவர்களை வழியனுப்பிவைப்பார்.

**மாயாபுரியில் பயணிகள்**

கிறிஸ்தியான், உண்மையானவன் இருவரும் மாயாபுரியை அடைவதை நான் என் கனவில் கண்டேன்.
மாயாபுரியில் மாயக் கண்காட்சி என்ற கண்காட்சி நடை பெற்றுக் கொண்டிருந்தது. எங்கும் மக்கள் கூட்டம்.
இந்தக் கண்காட்சி எப்போதுமே தொடர்ந்து நடை பெற்றுவரும் கண்காட்சியாகும். பெயெல்செபூல். அப்பொல்லியோன், லேகியோன் என்ற சாத்தானின் கூட்டத்தினரே இந்தக் கண்காட்சியை நடத்திவந்தார்கள்! மோட்சத்துக்குச் செல்லும் பயணிகளைக் கவர்ந்திழுக்கவே அந்தப் பாதையில் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது! இங்கு உலகப்பிரகாரமான புகழ், மாம்சத்துக்கடுத்த இன்பங்கள் இவற்றை விலைகொடுத்து வாங்க முடியும்! சூதாட்டம், நடனங்கள், போக்கிரிகளின் சபை இவை எப்போதுமே நடந்துகொண்டிருக்கும்!
கிறிஸ்தியானும், உண்மையானவனும் கண்காட்சிக்குள் நுழைந்தவுடன் எல்லோரும் அவர்களை வெறித்துப் பார்த்தார்கள். அவர்களுடைய உடை வித்தியாசமானதாயிருந்தது. பயணிகள் இருவரும் கானானின் மொழியைப் பேசியதைக் கேட்ட மற்றவர்கள் அவர்களைக் கேலி செய்தார்கள்.
அங்குள்ள வணிகர்கள் இவர்களிடம் வீண்பெருமைகளை விற்க முயன்றார்கள். அவர்களோ காதுகளைப் பொத்திக்கொண்டு, இந்த வீண்பெருமைகள் எங்களுக்கு வேண்டாம் என்று கூறிவிட்டார்கள்.
அப்படியானால் எதைத்தான் வாங்குவீர்கள்? என்று ஒரு வணிகன் அவர்களைக் கேலி செய்தான். பயணிகளோ சற்றும் தயங்காமல், நாங்கள் உண்மையைத்தான் வாங்குவோம் என்று கூறினார்கள்.

இந்தப் பதிலைக் கேட்டு கூடியிருந்தவர்கள் கடும் கோபம் கொண்டார்கள். சிலர் அவர்களைப் பரியாசம் செய்தார்கள். ஆனால் மற்றவர்களோ அவர்களை அடிக்கத்துவங்கினார்கள்! எங்கும் ஓரே கூச்சலும், குழப்பமுமாகிவிட்டது! கண்காட்சியின் தலைவன் இதைக் கேள்விப்பட்டான். அவர்களைக் கைது செய்து அழைத்து வருமாறு கட்டளையிட்டான்! அவர்களை விசாரிக்கும் குழுவினர் பல கேள்விகளைக் கேட்டனர்.

நாங்கள் மோட்சத்துச் செல்லும் பயணிகள். எங்களுக்கு வேறு எதுவும் தெரியாது என்றே இருவரும் திரும்பத் திரும்ப சொல்;லிக்கொண்டிருந்தார்கள்.
இந்தப் பதில் விசாரிப்புக் குழவினருக்கு எரிச்சல் மூட்டியது. புத்தி சுயாதீனம் இல்லாதவர்கள் என்று திட்டினார்கள், அடித்து உதைத்தார்கள். பிறகு அவர்களை ஓர் இரும்புக் கூண்டுக்குள் அடைத்து, எல்லோரும் அவர்களைப் பார்க்கும்படி கண்காட்சியின் நடுவே அந்தக் கூண்டை வைத்தார்கள்.
கண்காட்சியில் இருந்தவர்கள் அனைவரும் அவர்களைக் கேலிசெய்து காறித் துப்பினார்கள். ஆனால் பயணிகள் இருவருமே ஒன்றுமே பதில் பேசாமல் அமைதியாக இருந்தார்கள்.

இதற்கிடையே பயணிகளை என்ன செய்யலாம் என்ற பதில் மற்றவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது, விவாதம் வலுத்தது! பின்னர் அடிதடியில் சென்று முடிந்தது! அவர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள்.
இந்தக் கலகத்துக்குக் காரணம் கிறிஸ்தியானும், உண்மையானவனுமே என்று குற்றம் சாட்டி அவர்களைத் தலைவனின் முன்னே அழைத்துச் சென்றார்கள்.
முதலில் இவர்களைப் பிரம்பினால் அடித்து சங்கிலியால் கட்டுங்கள் என்று தலைவன் கட்டடையிட்டான். அப்படியே செய்யப்பட்டது!
கிறிஸ்தியானும் உண்மையானவனும் மிகவும் அடக்கத்துடன் அனைத்தையும் சகித்துக் கொள்வதைப் பார்த்தவுடன் அனைத்தையும் சகித்துக் கொள்ளவதைப் பார்த்தவுடன் கூட்டத்தில் சிலர் அவர்கள் மீது இரக்கப்பட்டு அவர்களை விடுதலை செய்யும்படி கோரினார்கள்! இதைக் கண்ட எதிர்த்தரப்பினர் அவர்களைக் கண்டிப்பாகக் கொன்றுபோட வேண்டும் என்று கூச்சலிடத் துவங்கிவிட்டார்கள். எனவே தலைவன் அவர்களை நீதிபதியிடம் அனுப்பினான்.
நன்மையை வெறுப்பவன் என்பவன்தான் நீதிபதி! இவர்கள் வியாபாரம் செய்வதைத் தடுக்கிறார்கள். அமைதியைக் குலைத்துவிட்டார்கள். நகரத்திலுள்ளவர்களை இரு பிரிவினராகப் பிரித்துவிட்டார்கள். இவை நமது இளவரசரின் சட்டங்களுக்குப் புறம்பானவை என்று அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது!
உடனே உண்மையானவன் எழுந்து, நாங்கள் எல்லாவற்றிற்கும் மேலான ஆண்டவருடைய சட்டங்களுக்குத்தான் கீழ்படிவோம். நீங்கள் சொல்லும் இளவரசன் சாத்தான். அவன் எங்கள் ஆண்டவருக்கு எதிரியானவன். அவனையும் அவனுடைய பிசாசுக் கூட்டத்தினரையும் நாங்கள் வெறுக்கிறோம் என்று மனத்திடத்தோடு கூறினான். உடனே கூடியிருந்தவர்கள் இன்னும் அதிக ஆத்திரத்தோடு கத்தத் துவங்கிவிட்டார்கள்.

பொறாமை, மூடநம்பிக்கை, புகழ்விரும்பி என்ற மூவரும் அவர்களுக்கு விரோதமாகச் சாட்சிகூற எழும்பினார்கள். கிறிஸ்தவ சமயம் இந்தக் கண்காட்சியின் வழக்கத்துக்கு விரோதமானது என்று கூறி தங்கள் விற்பனையைத் தடுத்ததாகக் குற்றம் சாட்டினார்கள்.

உண்மையானவன் எழுந்து ஆண்டவருடைய வார்த்தைக்கு விரோதமானவை அனைத்தும் கிறிஸ்துவுக்கு விரோதமானவை என்றுதான் நான் கூறினேன்.
சாத்தானும் அவனுடைய கட்டளைகளும் நரகத்துக்குத் தான் ஏற்றவை. அவை நமக்கு ஏற்றவை அல்ல என்று கூறியவுடன் மீண்டும் பெரிய கூக்குரல் கேட்டது! அவனுக்குக் கொலைத் தண்டனை அளிக்க வேண்டும் என்று கத்தினார்கள் அநேகர்!
நன்மையை வெறுப்பவன் என்ற நீதிபதி உண்மையானவனுக்கு மரண தண்டனை அளித்துத் தீர்;ப்புக் கூறி விட்டான்.
காவலாளிகள் உண்மையானவனைச் சாட்டையினால் அடித்தார்கள்!
கூடியிருந்தவர்கள் அவன்மீது கற்களை எறிந்தார்கள்! சிலர் வாளினால் அவன்

உடலைத் துளைத்தார்கள்! இவ்வாறு சித்தரவதை செய்தபின்பு ஒரு கம்பத்தில் அவனைக் கட்டி நெருப்பு மூட்டிவிட்டார்கள்! உண்மையானவன் ஆண்டவரைத் துதித்தபடியே உயிரை விட்டான்.

உடன்தானே அவன் ஒரு பறக்கும் இரதத்தில் ஏற்றப்பட்டு நேரடியாக மோட்சத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதை நான் என் கனவில் கண்டேன். கிறிஸ்தியான் சிறையில் அடைக்கப்பட்டான்! ஆனால் சில நாட்களுக்குள்ளாக அவன் தப்பிச் செல்வதற்க்கு ஆண்டவர் கிருபை செய்தார்!
கிறிஸ்தியான் மாயாபுரியைவிட்டு வெளியேறும்போது நம்பிக்கை என்ற பெயரையுடைய ஒருவன் அவனுடன் வந்து சேர்ந்துகொண்டான். கிறிஸ்தியான், உண்மையானவன் இவர்களுடைய திட விசுவாசத்தைக் கண்டு மனம் திரும்பியவன் அவன்! இருவருமாக மோட்சத்தை நோக்கித் தங்கள் பயணத்தைக் தொடர்ந்தார்கள்.

**சந்தேகக் கோட்டையில் பயணிகள்**

கிறிஸ்தியானும், நம்பிக்கையும் நடந்து செல்லும் வழியில் ஒரு அழகான ஆற்றின் அருகே வந்து சேர்ந்தார்கள். அளவுகடந்த மகிழ்ச்சியுடன் ஆற்றின் தெளிந்த நீரைப் பருகினார்கள். கரையிலிருந்து மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து உண்டார்கள். பச்சைப்பசேலென்ற புல்வெளியில் படுத்து உங்கினார்கள். விழித்து எழுந்தவுடன் கற்கள் நிறைந்த பாதையில் பயணத்தைத் தொடர்ந்தார்கள். நீண்ட தூரம் நடந்து வந்ததால் கால்கள் வலியெடுத்தது! கற்பாதையில் நடப்பது கடினமாக இருந்தது! அப்போது அவர்கள் செல்லவேண்டிய பாதைக்கு அருகில் புல்வெளிப் பாதை என்ற பசும்புற்களால் நிறைந்த பாதையைக் கண்டார்கள். வெகுதூரம் வரை அந்த பாதை கற்ப்பாறைக்கு இணையாகவே செல்வதுபோலத் தெனபட்டது!
புல்வெளிப் பாதையில் கால் வைத்து நடந்தார்கள். மெத்தைமீது நடப்பதுபோன்று கால்களுக்கு இதமாக இருந்தது! தாங்கள் செல்லவேண்டிய கற்பாதையைப் பற்றி நினைக்கவேயில்லை!

அந்தப் பாதையில் நடந்து செல்லும்போது அசட்டு நம்பிக்கை என்ற பெயருடைய ஒருவனைச் சந்தித்தார்கள்.
இந்தப்பாதை மோட்சத்துக்குத்தான் செல்கிறது. பயப்படாமல் என்பின்னே வாருங்கள் என்றான் அவன். பயணிகள் இருவரும் கவலை நீங்கப்பெற்றவர்களாக அவனைப் பின்தொடர்ந்தார்கள்!
இரவு வந்தது. இருளில் பாதை கண்ணுக்குத் தெரியவில்லை!
அப்போது கால்தவறி கிடுகிடு பாதளத்திற்குள் விழுந்துவிட்டான் அசட்டு நம்பிக்கை! அவனுடைய கூக்குரலைக் கேட்டு திடுக்கிட்டு நின்றுவிட்டார்கள் பின்னால் வந்த இருவரும்! அவனைக் குரல்கொடுத்துக் கூப்பிட்டு பார்த்தார்கள். ஆனால் பதிலே வரவில்லை! தீடிரென்று இடி, மின்னலோடு பெரிய மழை பெய்தது! புல்வெளிப் பாதையெங்கும் வெள்ளம் நிரம்பி விட்டது! தங்கள் தவறை உணர்ந்த கிறிஸ்தியானும், நம்பிக்கையும் மீண்டும் சரியான பாதைக்குத் திரும்ப முயன்றார்கள். ஆனால் வழி தெரியவில்லை!
மழையிலிருந்து தப்புவதற்காக ஒரு பாறை இடுக்கினுள் சென்று அமர்ந்தார்கள். களைப்பு மிகுதியால் அப்படியே உறங்கிவிட்டார்கள்! அவர்கள் தங்கிய இடத்துக்குச் சற்றுத் தொலைவில் தான் சந்தேகக் கோட்டை என்ற கோட்டை இருந்தது. நம்பிக்கையற்றவன் என்ற அரக்கன் தனது மனைவியோடு அங்கே வசித்து வந்தான்.

மறுநாள் காலை. தனது நிலத்தைச் சுற்றிப் பார்க்க வந்த அரக்கன் தூங்கிக்கொண்டிருக்கும் இருவரையும் கண்டு கடும் கோபம் கொண்டான். யாரது, எனது நிலத்தில் படுத்து உறங்குவது? என்று கர்ணகடூரமான குரலில் கேட்டான். திடுக்கிட்டு விழித்த இருவரும் அரக்கனைக் கண்டு பயந்து நடுநடுங்கினார்கள். ஐயா, நாங்கள் மோட்சத்துக்குச் செல்லும் பயணிகள். வழிதவறி இங்கு வந்துவிட்டோம். தயவு செய்து எங்களை விட்டுவிடுங்கள், என்று கெஞ்சினான் கிறிஸ்தியான். ஆனால் அரக்கனோ அவர்களைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய்

கோட்டையிலுள்ள பாதாளச் சிறையில் அடைத்துவிட்டான்! மூன்று நாட்கள் இரவும், பகலும் அவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை! உண்ண உணவு கிடையாது! குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்கவில்லை! பாறாங்கல் தரையில், பாதாள அறையின் துர்நாற்றத்தைச் சகித்துக்கொண்டு, சோர்வோடு கிடந்தார்கள் இருவரும்!

அரக்கன் தனது மனைவியிடம் இவர்களைப் பற்றிக் கூறினான். அவிசுவாசம் என்ற அவனது மனைவி மிகவும் கொடூரமானவள். கொஞ்சம்கூட இரக்கம் காட்டாமல் அவர்களை நன்றாக அடிக்கும்படி ஆலோசனை கூறினாள் அவள். பாதாளச் சிறைக்குச் சென்ற அரக்கன் தனது குறுந்தடியைக் கொண்டு அவர்களை நையப் புடைந்தான்! ஆனால் அசையாமல் விழுந்துகிடந்த இருவரும் ஒன்றுமே பதில் பேசவில்லை! மறுநாள் இரவு அவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்த அவிசுவாசம் தனது கணவனிடம் அவர்களைத் தற்கொலை செய்யத் தூண்டுமாறு யோசனை கூறினாள். பாதாளச் சிறைக்குச் சென்ற அரக்கன், நீங்கள் இனித் தப்பிச் செல்ல முடியாது. உங்களை நீங்களே மாய்த்துக் கொள்வதுதான் ஓரே வழி என்று பயங்காட்டினான்! ஆனால் கிறிஸ்தியானும், நம்பிக்கையும் மனம் தளர்ந்துவிடவில்லை! ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டு மேலும் ஒரு நாளைக் கழித்தார்கள்.

இதைக் கேள்விப்பட்ட அவிசுவாசம் தனது கணவனை அழைத்து, நீர் இதற்குமுன் இங்கு கொல்லப்பட்டவர்களின் எலும்புகளைக் காட்டிப் பயயமுறுத்தும் என்று கேட்டுக்கொண்டாள். அரக்கன் அவர்கள் இருவரையும் அழைததுச் சென்று ஏற்கனவே அங்கே கொல்லப்பட்டவர்களின் மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் காட்டினான். அந்தக் கொடூரமான காட்சியைக் கண்டு பயந்தாலும், இருவரும் தற்கொலை செய்துகொள்ள மறுத்துவிட்டார்கள். அரக்கன் அவர்களை மீண்டும் பாதாளச் சிறையில் அடைத்தான்.

அப்போது கிறிஸ்தியான், அடடா, என்னிடம் ஒரு சாவி இருக்கிறதே என்று கூறியபடி ஆண்டவரின் வாக்குத்தத்தம் என்ற சாவியை வெளியே எடுத்தான். இதோ இந்தச் சாவியைக் கொண்டு எந்தப் பூட்டையும் திறந்துவிடலாம் என்றான் உற்சாகத்துடன். சரி, வா போகலாம் என்று எழுந்தான் நம்பிக்கை. இருவருமாக பாதாளச் சிறையின் கதவண்டை வந்தார்கள். கிறிஸ்தியான் வாக்குத்தத்தம் என்ற சாவியைக் கொண்டு பூட்டை மிக எளிதாகத் திறந்து விட்டான்! ஆனால் பெரிய இரும்புக் கதவை அசைப்பது தான் கடினமாக இருந்தது. முழுமுயற்சியோடு கதவைத் திறந்துவிட்டார்கள்! அந்தச் சத்தம் கேட்டு உறங்கிக் கொண்டிருந்த அரக்கன் விழித்துவிட்டான்.

கிறிஸ்தியானும், நம்பிக்கையும் தப்பி ஓடுவதைக் கண்ட அரக்கன் அவர்களை விரட்டினான். ஆனாலும் அவனுக்குத் திடீரென மூட்டுவலி வந்துவிட்டது! ஓட முடியாமல் கீழே விழுந்துவிட்டான்! பயணிகள் இருவரும் மீண்டும் சரியான பாதைக்கு வந்து சேர்ந்தார்கள்.

**மகிழ்ச்சி மலையில் பயணிகள்**

அழகான தோட்டங்கள் நிறைந்த மகிழ்ச்சி மலைக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். பழ மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து உண்டார்கள். மர நிழலில் அமர்ந்து களைப்பாறினாரகள்.
மலையுச்சியில் அறிவு, ஞானம், கவனம், தங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். பயணிகளைக் கண்டவுடன் அவர்களை அன்போடு வரவேற்றார்கள். உணவளித்து உபசரித்தர்கள். கிறிஸ்தியானும், நம்பிக்கையும் தங்கள் அனுபவங்களை அவர்களுக்கு விவரமாகக் கூறினாரகள். அவற்றை ஆவலோடு கேட்ட மேய்ப்பர்கள் இரவு தங்கிப் போகும்படி வேண்டிக் கொண்டார்கள். அந்த மகிழ்ச்சியான சூழ்நிலையில் இரவைக் கழித்தார்கள். மறுநாள் காலையில் எச்சரிக்கை என்ற பெயரையுடைய குன்றுக்கு அழைத்தச் சென்றார்கள். அங்கிருந்து பார்த்தபோது சற்றுத் தொலைவில் கணபார்வையற்ற சிலர் கல்லறைகளுக்கு நடுவே தட்டுத் தடுமாறியவாறு சுற்றிவருவது தெரிந்தது!

யார் இவர்கள்? என்று கேட்டான் கிறிஸ்தியான்.
இந்த மலைக்கு வரும் வழியில் கற்பாதைக்கு அருகில் புல்வெளிப் பாதை இருந்ததல்லவா? அந்தப் பாதையில் சென்று, சந்தேகக் கோட்டை என்ற கோட்டையின் அரக்கனுடைய கையில் பிடிபட்டவர்கள் தாம் இவர்கள். அவன் இவர்கள் கண்களைக் குருடாக்கி இப்படி அலையவிட்டுவிட்டான் என்றார்கள் மேய்ப்பர்கள்.

திடுக்கிட்ட கிறிஸ்தியானும், நம்பிக்கையும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் கண்கள் கலங்கின! தங்களைக் காப்பாற்றிய ஆண்டவரை எண்ணித் துதித்தார்கள்.
மேய்ப்பர்கள் பயணிகள் இருவரையும் மலையின் அடியிலிருந்து ஒரு கதவண்டை அழைத்துச் சென்றார்கள். கதவைத் திறந்த உள்ளே பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்கள். உள்ளே மிக ஆழமான பள்ளம் காணப்பட்டது. கருமை நிறப் புகை வெளிக்கிளம்பியது! நெருப்பு எரிகிற இரைச்சலும் கேட்டது! வேதனையில் புலம்புகிறவர்களின் கூக்குரல் எழுந்தது! இது எந்த இடம்? என்று கேட்டான் கிறிஸ்தியான். இது நரகத்திற்குப் போகும் ஒரு குறுக்கு வழி, பாசாங்கு செய்பவர்களின் வாசல் என்று இதற்குப் பெயர் என்று விளக்கினார்கள் மேய்ப்பர்கள்.

பிறகு பயணிகளை தெளிவு என்ற மலைமுகட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். ஒரு தொலைநோக்கியை அவர்கள் கையில் கொடுத்து, இதோ இதன்மூலம் பார்த்தால் மோட்சத்தின் வாசல் தெரியும் என்று கூறினார்கள். ஆனால் பதட்டத்தின் காரணமாகப் பயணிகளின் கை ஆடியது! அதனால் அவர்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை!
பயணிகள் மேய்ப்பர்களிடமிருந்து விடைபெறும் வேளை வந்தது. மேய்ப்பர்களில் ஒருவன் அவர்கள் இனிச் செல்லவேண்டிய பாதையின் வரைபடம் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தான். மற்றறொருவன் முகத்துதி என்பவனைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி ஆலோசனை கூறினான், மூன்றமவன் மயக்க நிலத்தில் படுத்து உறங்கிவிடாதீர்கள் என்று எச்சரித்தான். நாலாமவன் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! என்று கூறி வழியனுப்பி வைத்தான்.

**முகத்துதியைச் சந்தித்தல்**

கிறிஸ்தியானும், நம்பிக்கையும் மகிழ்ச்சியோடு நடந்து சென்றார்கள். ஓரிடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்தது. எந்தப் பாதையில் செல்வது என்று தயங்கி நின்ற போது அங்கியால் முகத்தை மூடியிருந்த ஒருவன் அருகே வந்து ஏன் நிற்கிறீர்கள்? என்று கேட்டான்.
பயணிகள் இருவரும் பாதை தெரியவில்லை என்றார்கள். என்னைப் பின்பற்றி வாருங்கள், நானும் மோட்சத்திற்குத்தான் போகிறேன் என்றான் அவன். இருவரும் அவனுக்குப் பின்னே சென்றார்கள். அந்தப் பாதை வளைந்து வளைந்து சென்றபடியால் எந்தத் திசையில் செல்கிறோம் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை!

அப்போது இருவரும் ஒரு பெரிய வலையில் சிக்கிக்கொண்டார்கள்! அவர்களால் நகரக்கூட முடியவில்லை! அவர்களை அழைத்துவந்தவர்களின் முகத்திரை விலகியது! அவன்தான் முகத்துதி என்பதைக் கண்டு கலக்கமடைந்ததார்கள்! அவன் அவர்களை அப்படியே விட்டுவிட்டுச் சென்றான்.
முகத்துதியிடம் எச்சரிக்கையாயிருங்கள் என்று மேய்ப்பன் கூறினாரே! நாம் கவனக் குறைவால் இப்படி மாட்டிக்கொண்டோமே! பிறனை முகஸ்துதி செய்கிறவன், அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான் (நீதி.29:5 ) என்ற வார்த்தை எவ்வளவு உண்மையாகி விட்டது! என்று அங்கலாய்த்தான் கிறிஸ்தியான். சிறிது நேரம் கழித்து பிரகாசமான ஆடையணிந்து ஒருவர் அவர்களருகே வந்தார். அவர் கையில் ஒரு சாட்டை இருந்தது. வலையைக் கிழித்து அவர்களை விடுவித்தார்.
சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேசத்தை தரித்துக் கொள்வானே (2 கொரி 11:14) என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை மறந்துவிட்டீர்களே! மேய்ப்பன்

கொடுத்த வரைபடத்தை எடுத்துப்பார்த்துச் சரியான பாதையை அறிந்திருக்கலாமே! என்று கடிந்து கொண்ட அவர் சாட்டையை எடுத்து அவர்களை அடித்தார். தண்டனையை அளித்த பின்பு வாருங்கள் சரியான பாதையை உங்களுக்கு காட்டுகிறேன் என்று அவர்களை அழைத்துச் சென்று சரியான பாதையில் செல்ல வைத்தார். இருவரும் மயக்க நிலத்தை வந்தடைந்தார்கள். காற்றே இல்லாததுபோல காணப்பட்டது! நடப்பதற்கே கடினமாக இருந்தது! நம்பிக்கை சற்று அமர்ந்து ஓய்வெடுக்கலாம் என்று கூறினான்.
மேய்ப்பன் கூறியதை மறந்துவிட்டாயா? இது மயக்க நிலம் நாம் முழுக் கவனத்துடன் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்தான் கிறிஸ்தியான். உறங்கிவிடாதிருக்க ஆண்டவர் செய்த அற்புதங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே நடந்து, அந்த நிலத்தைக் கடந்துவிட்டார்கள்.

**பேரின்பபுரத்தில் பயணிகள்**

இருவரும் பேரின்பபுரத்தை அடைந்தார்கள். இங்கு நறுமணம் கொண்ட தென்றல் வீசியது! தரையெங்கும் வண்ண வண்ண மலர்கள்! எங்கும் பறவைகளின் இன்னிசை கீதங்கள்! இங்கு சூரியன் இரவுபகலாகப் பிரகாசித்தது! அங்கிருந்தபடியே மோட்சத்தைக் கண்டு மெய்மறந்து நின்றார்கள்! முத்துக்களாலும், நவரத்தினங்களாலும் கட்டப்பட்டிருந்த அந்தப் பட்டணம் பிரகாசமாக ஒளி வீசியது. தரையெங்கும் தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டு தகதகவென்று மின்னியது! சூரிய ஒளி அதன்மீது பட்டுப் பிரதிபலிப்பதைக் காண முடியாமல் கண்களைப் பொத்திக் கொண்டார்கள் இருவரும்! மோட்சப் பட்டணம் அவ்வளவு பிரகாசமாக இருந்தது!

பயணிகள் இருவரும் அங்கிருந்து தோட்டத்தின் பழங்களைப் பறித்து உண்டார்கள். மர நிழலில் படுத்து ஓய்வெடுத்தார்கள்.
அவர்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தபோது தங்கம்போல ஒளிவீசும் ஆடையணிந்த இருவரைச் சந்தித்தார்கள். அவர்கள் முகம் பிரகாசமாக இருந்தது! பயணிகளைக் கண்டு நலம் விசாரித்தார்கள் அவர்கள்.
இன்னும் இரண்டு சோதனைகளைத்தான் நீங்கள் சகிக்க வேண்டியிருக்கிறது. அதன்பிறகு மோட்சத்தை அடையலாம் என்று அவர்கள் கூறியவுடன் பயணிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!
மேலும் சிறிது தூரம் சென்றவுடன் மோட்சத்தின் வாசலைக் கண்டார்கள். ஆனாலும் அவர்களுக்கும் வாசலுக்குமிடையே ஒரு பெரிய ஆறு ஓடியது! ஆதன் ஆழமோ அதிகம்! அதைக் கடக்கப் பாலமும் இல்லை! பயணிகள் இருவரும் தயங்கி நின்றார்கள்!

ஆதுவரை அவர்களுடன் வந்த ஒளிவீசும் ஆடையனிந்தவர்கள் நீங்கள் அந்த வாசலை அடையவேண்டுமானால் இந்த ஆற்றைக் கடந்துதான் செல்லவேண்டும் என்று கூறிவிட்டார்கள். பயந்து நடுங்கியபடியே ஆற்றினுள் இறங்கினார்கள் இருவரும்! சிறிது நேரம் போவதற்குள்ளாக நீர்மட்டம் அவர்கள் தலைக்குமேல் வந்துவிட்டது! கிறிஸ்தியான் மூழ்கத்துவங்கினான்!
ஐயோ, அமிழ்ந்து போகிறேனே! என்று புலம்பினான். கவலைப்படாதே கிறிஸ்தியான். ஆழம் அதிகமில்லை! என் கால்களுக்குக் கீழாக கடினமான தரை தட்டுப்படுகிறது என்று தேற்றினான்

**நம்பிக்கை.**

ஆனால் கிறிஸ்தியானோ, நான் சாகும் வேளை நெருங்கிவிட்டது. என்னால் பாலும் தேனும் ஓடும் மோட்ச பூமியைப் பார்க்க முடியாது என்ற அங்கலாய்ப்போடு நம்பிக்கையின்மீது சாய்ந்துவிழுந்தான். கிறிஸ்தியான் மூழ்கிவிடக்கூடாதே என்று மிகவும் கடினத்துடன் அவனைத் தாங்கிப் பிடித்தபடியே நீந்தினான் நம்பிக்கை.
அப்போது நம்பிக்கை விசுவாசத்தோடு, இயேசுவானவரே, எங்களைக் காப்பாற்றும் என்று வேண்டினான். இந்த வார்த்தைகள் கிறிஸ்தியானுக்கு உற்சாகத்தைக்

கொடுத்தன. அவனும் புத்துணர்வோடு நீந்தத் துவங்கினான். இவ்வாறு முதல் சோதனையில் வெற்றிபெற்றார்கள்!

**மோட்சத்தை அடைந்தனர்**

இருவரும் மறுகரையை அடைந்தார்கள். அங்கே ஒளிவீசும் ஆடை தரித்த இருவரும் வரகளுக்காகக் காத்திருந்தார்கள். பயணிகளை அன்போடு வரவேற்றார்கள்.
மோட்சம் ஒரு மேன்மையான குன்றின்மீது இருப்பதை நான் என் கனவில் கண்டேன். பயணிகள் ஒளிவீசும் ஆடை தரித்தவர்களுடன் சேர்ந்து மோட்சத்தை நோக்கி நடந்தார்கள். வாசலை நெருங்கியவுடன் மோட்சத்தின் தூதர்கள் அவர்களை எதிர்கொண்டு வந்தார்கள்.
இவர்கள் இருவரும் பூமியில் வாழும்போது ஆண்டவரை நேசித்தவர்கள். எல்லாவற்றையும் அவருடைய நாமத்திற்கென்று விட்டுவிட்டவர்கள் என்று கிறிஸ்தியானும் நம்பிக்கையும் அறிமுகம் செய்யப்பட்டார்கள்.
எக்காளம் வாசிப்பவர்கள் எக்காள தொனியோடு அவர்களை வரவேற்றார்கள். பயணிகள் இருவரும் வாசலை அடைந்தார்கள். அங்கேதான் இரணடாவது சோதனை இருந்தது!

அடையாளச் சுருள் எங்கே! என்ற கேள்வி கேட்கப்பட்டது.
உடனே அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்த சுருளை எடுத்துக் கொடுத்தார்கள்.
அவை இராஜாதிராஜாவிடம் கொண்டுபோகப்பட்டன.
அவற்றைச் சோதித்த அவர் இந்தச் சுருள்களைக் கொண்டு வந்தவர்கள் எங்கே? என்று கேட்டார்.
அவர்களை உள்ளே அழைத்து வாருங்கள் அவர்கள் உள்ளே நுழையத் தகுதியுள்ளவர்களே என்று தீர்ப்பளித்தார் இராஜாதிராஜா.
கதவு திறக்கப்பட்டது. கிறிஸ்தியான், நம்பிக்கை இருவரும் மோட்சத்தினுள் நுழைவதை நான் என் கனவில் கண்டேன்.

இதோ அவர்கள் நுழைந்தவுடன் அவர்கள் உருவம் மாறியது! அவர்கள் முகம் பிரகாசித்தது! அவர்கள் பொன்போல ஒளிவீசும் ஆடையணிந்தவர்களாகக் காணப்பட்டார்கள்! அவர்கள் தலையில் பொன்முடி சூடப்பட்டது! ஆண்டவரைத் துதித்துபாட கின்னரம் கொடுக்கப்பட்டது!
மோட்சத்திலுள்ள மணிகள் எல்லாம் ஒலியெழுப்பின! எங்கும் பாடல் தொனி! ஆண்டவருடைய மகிழ்ச்சிக்குள் பிரவேசியுங்கள் என்ற குரல் எழும்பியது! சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக (வெளி.5:13) என்ற பாடலைப் பாடி அனைவருமாக ஆண்டவரைத் துதித்தனர்!